குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] விபவ ஆண்டு ஆனித்திங்கள் 10 - 7 - 88 [இதழ் 8

ஸ்ரீ சுந்தரர் கயிலை செல்லும் காட்சி

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழாவை முன்னிட்டு இதழை அலங்கரிக்கிறது.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10-7-88 | இதழ் 8

உட்பொருள்

எண்		பக்கம்
1	நமது குலதெய்வம்!	393
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	398
3	குமரகுருபரர் : சில சிந்தனைகள் ...	404
4	அபிராமி அந்தாதி ...	409
5	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	413
6	போதமும் சித்தியும் ...	418
7	தருமையம்பதியும் தவமுனிவர் குமரகுருபரரும் ...	421
8	கடிதம் ...	424
9	செத்துப் பிறவாதார்	426
10	சிறப்புலி நாயனார் ...	427
11	சச்சிதானந்தப் பிள்ளையார் கோயில் கல்வெட்டு ...	430
12	செய்திகள் ...	433
13	எதிர்காலம் ...	437
14	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-6. ...	441

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

தானன்றி நிற்கவெழுஞ்
சச்சிதா நந்தனைநீ
யானென் குணமென்
னிடும்பென்னே — ஊனநீ
ஞானகுணம் பெற்றின்னு
நானு னெனநவிலும்
ஈனகுணம் போனதிலை யே.

— முத்திநிச்சயம் 10

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 இதழ் 7

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ ஆனி 10—7—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

நமது குலதெய்வம்!

" ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன்; எல்லாம் உய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாள்; என்றும்
திருமணக்கோலப் பெருமாள்; மறைப்பெருமாள்;
எமது குல தெய்வம் ஆமால் "

[காஞ்சிப்புராணம் — சிவஞான சுவாமிகள்]

பாரத நாடு ஞானபூமி :

பாரத நாடு ஆன்மீக வளம் பெருக்கிய அருளாளர் பலர் அவதரித்த ஞானபூமி; உலகம் வாழ என்றே தவம் பெருக்கிய

எண்ணற்ற ஞானியரும் முனிவரும் வாழ்ந்த பழம்பெரும் பூமி. வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் ஆகிய பழம்பெரும் கருவூலங்கள் நம் ஆன்ரோர் பெருமையைப் பறைசாற்றுகின்றன. அவற்ருல் விளங்கும் நம் பண்டைய கலாசாரம், பண்பாடு, நாகரிகம் முதலிய மேம்பாடுகளை இன்றைய உலகம் உணர்ந்தால் பயன்பெறும். அவற்றை உணர்தற்குத் துணைபுரியும் கருவிகளை மறவாது பேணிக்காத்தல் வேண்டும்.

முன்னேர் பெற்ற அனுபவம் பேணல் :

ஒரு நாட்டில் முழுமையாகக் கற்றுமெய்யுணர்வு பெற்றுள்ள மேலோர் - தலையாய அறிவுடையோர் பலராக இருக்க முடியுமா? இயலாது! "தவமும் தவம் உடையார்க்கே ஆகும்" ஆதலின் அத்தகைய தவநலம் பெற்ற மேலானேர் பெற்ற அனுபவங்களை அவ்வந் நாட்டில் உள்ள அனைவரும் பெறல் வேண்டும். பெற்ருல் தான் நாட்டில் 'உணர்ச்சி ஒருமைப்பாடு' – (Emotional Integration) உணர்ச்சி இணைப்பு, முன்னேற்றம்இருக்கும் என்பர் அறிஞர். இது பண்டும் இன்றும் என்றும் உள்ள நடைமுறை அறிவு. இவ்வுண்மையைக் கடைப்பிடித்தே வேத வியாசர் தம் நான்கு மாணுக்கர்கள் வழியே நான்கு வேதங்களையும் உலகில் பரப்பினர்; அத்துடன் பதினெண் புராணங்களையும் கேட்டுணர்ந்து சூத முனிவர் வழியே உலகில் பரவச் செய்தார். இந்த அனுபவங்களை இவ்வாறே உலகில் பரவச் செய்திருக்காவிடில் முன்னேர் பெற்ற பேரனுபவமும் மாண்பும் பிற்காலத்து நம்மனேர்க்குக் கிடைத்திருக்க மாட்டா என்பது தெளிவு.

திருத்தொண்டத்தொகையின் ஏற்றம் :

நம்முடைய சைவசமயத்தில் வணக்கத்துக்குரியவர்களாய் வாழ்ந்த ஆசாரியப் பெருமக்களை - அனுபூதிச் செல்வர்களை - பேரருளாளர்களை - அரன் அடியவர்களை அறிந்து போற்றிட வழி வகுத்தவர் சுந்தரமூர்த்தி நாயனரே ஆவர்; சுந்தரர் திருத்தொண்டத் தொகை தோன்றியிராவிட்டால், திருத்தொண்டர் திருவந்தாதி இல்லை; திருத்தொண்டத் திருத்தொகையும், திருத்தொண்டர் திருவந்தாதியும் தோன்றியிராவிட்டால் திருத்தொண்டர் புராணம் எழுந்திருக்க இயலாது. நம் "குருபரம்பரை பிரபாவம்'' ஆகிய பெரியபுராணத்தைச் சேக்கிழார் பெருமான் இயற்றச் சுந்தரர் திருவாக்கே துணை நின்றது; இந்தப் பேருண்மையைச் சேக்கிழார் பெருமானே உணர்ந்து ஓதியுள்ளார்.

அவதார நோக்க மாண்பு :

சுந்தரர் அவதார நோக்கமே, மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடவும், தீது இல்லாத் திருத்தொண்டத் தொகையைத் தரவும் ஆகிய இரண்டும்தாம் என்று "திருமலைச் சிறப்பிலேயே" சேக்கிழார் பெருமான் உருக்கமுடன் ஓதுவது உளம் கொள்ளு தற்கு உரியதாகும் :

" மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப்
போதுவார் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினர் "

தேசம் உய்ய அருளிய திறம் :

திருத்தொண்டத் தொகையைச் சுந்தரர் அருளியதால் நாடு உய்ந்தது என்ற மெய்ம்மை சேக்கிழார் திருவுள்ளத்தில் அழுத்த மாகப் பதிந்திருந்தது. சமயம் வாய்க்கும் போதெல்லாம் தம் புராணத்தின் இடையிடையே கூறிப் போற்றுவதுண்டு. எடுத்துக் காட்டாகச் சண்டேச நாயனர் புராணத்தின் இறுதியில்வரும் திருப்பாட்டு உணரத் தக்கதாகும் :

" நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகை முன்பணித்த திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம் "

மூலமான பெருமை :

அடியார் பெருமையை எல்லா உயிர்களும் தொழுமாறு எடுத்துக்காட்டிய சுந்தரர் செந்தமிழைப் பெற்றதால் தேசம் உய்ந்தது என்ற பேருண்மையை மறக்கஇயலாது; இதுமட்டுமோ?

" ஞாலம் உய்ய நாம்உய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன்பாட "

" தென்தமிழ்ப் பயனுய்உள்ள திருத்தொண்டத் தொகை "

" மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த
ஞாலம்உய்ய எழுந்தருளும் நம்பிதம்பிரான் தோழர் "

என்னும் பெரியபுராணப் பேராசிரியராம் சேக்கிழார், சுந்தரர் செய்துள்ள பேருதவியைப் பல்லாற்ருனும் பரவுவர்.

சிவஞான முனிவரின் முடிவு:

சேக்கிழார் மெய்ம்மையை இனிது உணர்ந்த மாதவச் சிவஞான சுவாமிகள் சுந்தரர் பெருமானை ''எமது குலதெய்வம்'' என்றே போற்றுகின்றார். அத்திருப்பாட்டே இத் தலையங்கத்தின் தொடக்கத்தில் திகழ்வது. பெரும்புலவராகவும், இலக்கண இலக்கியப் பேரறிஞராகவும், மாமுனிவராகவும் விளங்கிய துறைசை ஆதீனச் சிவஞான முனிவரும் சுந்தரர் பெருமையினைச் சிந்தித்து உணர்ந்து, அப்பெருமான் நம்மால் என்றென்றும் வணங்கத்தக்க குலதெய்வமே ஆவார் என்று முடிவுசெய்து அறிவுறுத்தியுள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெருமக்களின் மீது சுந்தரர் கொண்ட பக்தி எல்லோர்க்கும் வழிகாட்டும் ஏற்றம் உடையது.

வழிகாட்டிய ஆசாரியர் :

'' நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்''

'' நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக் கரசன் நாளைப்போவானும்
கற்ற சூதன் நற் சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள் ''

'' நல்லிசை ஞானசம்பந்தனும்
நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை ''

என்று தம் ஆசாரியர்களாகிய அப்பெரு மக்களை இணைத்துப் போற்றும் அழகு வியந்து போற்றத் தக்கது. நால்வகை நெறிகளில் ஒன்றாகிய யோக நெறியில் நின்று வழிபட்டும் வாழ்ந்தும் காட்டிய பெருமானார் சுந்தரர். நடராசப் பெருமானைச் சுந்தரர் வழிபட்ட அனுபவ நிலையைச் சேக்கிழார் பாடும் திருப்பாட்டு மறக்க இயலாதது; இத்திருப் பாட்டே ஒரு குமரகுருபரரை உலகிற்கு அருளியது என்பதும் அடிகளாரின் முந்நூறாவது ஆண்டு நிறைவை ஒட்டிக் கருதுவது பொருத்தம் ஆகும். அத்திருப்பாட்டு வருமாறு:

" ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெருங்கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார் "

நடராசப் பெருமானைச் சுந்தரர் வழிபட்டமுறை, அனைவர்க்கும் எப்படி வழிபாடு செய்ய வேண்டும் என்பதற்கு வழி காட்டுவது. "மேருவரையின் மேம்பட்ட தவத்தான்" என்று இப்பெருமான் தவச் சிறப்பைச் சேக்கிழார் திருவாய் மலர்ந்துள்ள திறம் உணரத் தக்கது. இவ்வுண்மைகளை எல்லாம் உளம் கொண்டே சிவஞான சுவாமிகள், "எமது குலதெய்வம்" என்று போற்றினர் என்று புரிகிறது.

ஆடிச்சுவாதியில் வழிபடுவோம்; அருள்பெறுவோம் :

இத்தகு பேரருளாளராகிய சுந்தரர், இறைவன் திருவடியிற் கலந்த ஆடிச்சுவாதித் திருநாள், வரும் 22—7—88 வெள்ளிக்கிழமை ஆகும். இத்திருநாளில் இப்பெருமானார் காட்டிய வழிமுறைகளை அவர்தம் திருவாக்குக்களை முற்றும் ஓதி உணர்ந்து மும்மைப் பயன்களையும் எய்துவோமாக.

வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி!

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

பார்வையாளர் குறிப்பு நகல்

திருக்கடவூரில் எனது தாயாருடைய எழுபத்தைந்தாம் ஆண்டு பிறந்தநாள் விழாவை உறவினருடன் சீரும், சிறப்புமாகக் கொண்டாடினோம். தருமை ஆதீனத் திருக்கோயில் அன்று போல இன்றும் புனிதத்தன்மையை நிரப்பியதாக உள்ளது. சிறந்த தரிசனம். திருக்கோயில் அலுவலர்களும், அதிகாரிகளும் எங்களை அன்புடன் வரவேற்று, இன்புற வேண்டியதெல்லாம் செய்து கொடுத்தனர். தருமை ஆதீன மகாசந்நிதானத்தின் மேற்பார்வைச் சிறப்புக்கும் தூய்மைக்கும் எடுத்துக்காட்டு. அமிர்தகடேசுவரர், அபிராமி உலகின் மீது கருணைமழை பொழிந்து வருகின்றனர். மேலும், மேலும் வையகம் இதை உணர்ந்து இத்திருக்கோயில் இறை அடியின் அருள்பெற இறைவனை வேண்டுகின்றேன்.

(S-d) திரு. வெங்கட்ராமன், I. A. S.
Chairmen & Managing Director
Tamil Nadu Indusrial Investment Corparation,
Madras.

3—6—88

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

சித்தர்க்காடு

ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் திருக்கோயிலில் நடைபெற்ற

குருபூஜை விழாவில் வழங்கியருளிய

ஆசியுரை

8—5—1988

முத்தர் அறுபத்து மூவர் பணிந்தேத்தும்
சித்தர்வனத் தில்லேச்சிற் றம்பலவா! — பத்தர்
பவஇருளை நீக்கியருள் பானுவே! தூய
தவவடிவே! நின்தாள் சரண்.

இந்தியப் பெருநாட்டின் தென்பகுதி செய்த தவப்பயனால், சமய ஆசாரியர்களும், சந்தான ஆசாரியர்களும் தமிழ்நாட்டில் தோன்றிச் சைவப் பயிர் வளர்த்துச் சிவபுண்ணியப் பயன் விளைத்தனர். கி. பி. 7 ஆம் நூற்றுண்டுமுதல் உலகமே வியக்கத் தக்க வகையில் சைவ சித்தாந்தச் செந்நெறியைத் தமிழ்கூறும் நல்லுலகம் புத்துயிரூட்டித் தரணிக்கு அளித்தது. சமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவார திருவாசகங்களாகிய தோத்திரங்களின் வழிப் புத்துணர்வூட்டிச் சிவநெறி பரப்பிச் சமுதாயத்தை நெறிப்படுத்தினர்.

அகச் சந்தானம் :

கி. பி. 13 ஆம் நூற்றுண்டு முதல் தமிழகத்தில் மெய்கண்ட சந்தான பரம்பரையை இறையருள் தோற்றுவித்தது. திருக்கயிலாயத்தில் ஸ்ரீ கண்டபரமசிவனார் திருநந்திதேவருக்கும், திருநந்திதேவர் சனற்குமாரருக்கும், அவர் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி மா முனிகளுக்கும் சிவஞானஉபதேசம் செய்தருளினர். திருநந்திதேவர் முதலாகிய நால்வரும் திருக்கயிலாயத்தில் வாழ்பவர்கள்; ஆதலால் அவர்கள் அகச்சந்தான குரவர் எனப்பெறுவர்.

புறச் சந்தானம் :

அகச்சந்தான குரவருள் நான்காமவராகிய பரஞ்சோதி மாமுனிகள் கயிலாயத்திலிருந்து விண்வழியாகத் தென்திசை வருங்கால் திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த சுவேதனப் பெருமாள் என்னும் பெயருடைய இரண்டுவயதுக் குழந்தை பக்குவம் உடையதாய் இருந்ததை அறிந்து, கீழே இறங்கிவந்து சிவஞான உபதேசம் செய்தார்; 'மெய்கண்டார்' என்ற தன் ஆசாரியரின்பெயரைத்தீட்சாநாமமாகச்சூட்டினர். மெய்கண்டார் அருணந்தி சிவாசாரியருக்கும், அவர் மறைஞானசம்பந்தருக்கும் அவர் உமாபதி சிவாசாரியருக்கும் சிவஞானேபதேசம் செய்தனர். மெய்கண்டார் முதலிய நால்வரும், திருக்கயிலாயத்துக்குப் புறத்தே - நிலவுலகில் வாழ்ந்தவர்கள் ஆதலால் புறச்சந்தான குரவர் எனப் போற்றப் பெறுகின்றனர். இங்குச் சந்தானம் என்பதன் பொருள் தெரிதல் இன்றியமையாததாகும். சந்தானம் என்பது புத்திரன் என்னும் பொருளுடையது. ஒருவனுக்கு ஊன (உடல்) சம்பந்தமான புத்திரன் எப்படி வழி வழி வாரிசாகிறேனே அதுபோல் ஞான (அறிவு) சம்பந்தமுடைய புத்திரனுக வழி வழி வாரிசாக, திருக்கயிலாயத்தில் ஸ்ரீ கண்ட பரமசிவனுரின் உபதேசத்தை இடையறவுபடாமல்காத்துவருவோரைகுறிக்கிறது.

தருமைக் குரு மரபு :

பிறகு உமாபதி சிவம் அருள்நமச்சிவாயருக்கும், அவர் காழிக் கங்கை மெய்கண்டாருக்கும், அவர் சித்தர்க்காடு ஸ்ரீ சிற்றம்பல நாடிகளுக்கும் சிவஞானேபதேசம் செய்தனர். இவர்களே சீகாழிச் சிற்றம்பலநாடிகள் எனப் போற்றப் பெறுபவர்களாவார்கள். இவர்கள் அறுபத்து மூன்று அடியவர்களுடன் ஜீவசமாதி கூடியுள்ள இடமே சித்தர்க்காடு ஸ்ரீ சிற்றம்பலநாடிகளின் திருக்கோயிலாகும். இது பரிவார மூர்த்திகளுடன் சிவன்கோயிலாகத் திகழ்கிறது. இவர்கள் பழுதை கட்டிச் சம்பந்தப் பண்டாரத்திற்கும், அவர் சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரத்திற்கும், அவர் சிவபுரம் தத்துவப் பிரகாச பண்டாரத்திற்கும், அவர் திருவாரூர்ப் பழுதை கட்டி ஞானப்பிரகாச பண்டாரத்திற்கும், அவர் கமலை ஞானப்பிரகாச பண்டாரத்திற்கும், அவர் தருமை ஆதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கும், சிவஞான உபதேசம் செய்தருளினர். இவர்களை அடுத்துத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் வரை வழி வழியாகத் திருக்கயிலாயபரம்பரை ஆசாரியர்களின் சந்தான குரு மரபு தழைத்துச் செழித்து வளர்ந்து வருகின்றது.

சிற்றம்பலநாடிகள், தாமும் தம் மாணாக்கர்களாகிய அறுபத்து மூவரும் ஒருசேரச், சித்திரைத் திருவோண நாளன்று ஜீவசமாதி கூடுவதாகத் தீர்மானித்தார். அரசனிடம் இதற்கு ஆவன செய்யுமாறு பணித்தருளினர். அரசன், மயிலாடுதுறையின் வடமேற்றிசையில் காவிரிக்கரையில் தனித்தனியே சமாதிகூடும் நிலவறைகள் அமைப்பித்தான். மக்கள் ஞான ஆசாரியரைக் காணக் குழுமினர். சித்திரைத் திருவோண நாளன்று அனைவரையும் அருட்கண்ணால் நோக்கி ஆசிவழங்கினர் ஸ்ரீ சிற்றம்பலநாடிகள். தமக்கு என அமைக்கப்பெற்றிருந்த சமாதியில் இறங்கிச் சின் முத்திரை தாங்கி ஜீவசமாதி கூடினர். சீடர்கள் தம்குருநாதரைப் போற்றிப் பாடித் தத்தமக்கு என அமைக்கப்பெற்ற நிலவறைகளில் இறங்கி நிட்டை கூடிச் சிவப்பேறு எய்தினர். ஏககாலத்தில் இது நிகழ்ந்தது. ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் திருக்கோயில் கர்ப்பக் கிருகத்தின் பின்புறச்சுவரில் 61 சிவலிங்கத்திருவுருவங்கள் விளங்குவது அடியாரோடு ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் சமாதி கூடியதை விளக்கும் அடையாளங்களாக உள்ளன. இவ்வாசாரியர் துகளறு போதம், செல்காலத்திரங்கல், வருங்காலத்திரங்கல், நிகழ் காலத்திரங்கல், திருப்புன்முறுவல் முதலிய நூல்களை அருளிச் செய்துள்ளார்.

அறுபத்துமூவர் பேட்டை :

ஸ்ரீ சிற்றம்பலநாடிகளும் அவர் தம் மாணாக்கர்கள் அறுபத்து மூவரும் வாழ்ந்த இடம் பற்றி ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. தருமை ஆதீனத்தின் அருளாட்சிக்குப்பட்ட, மாயூரம் ஸ்ரீ மயூரநாத சுவாமி திருக்கோயிலிலுள்ள குமரக்கட்டளை ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி திருக்கோயிலுக்கு அறுபத்துமூவர் பேட்டை என்னும் இடம் சொந்தமாக உள்ளது. இந்த அறுபத்துமூவர் என்பது, நாயன்மார்கள் அறுபத்துமூவரையும் குறிக்கும் என்று கருதப் பெற்றது. ஆனால் சித்தர்க்காடு ஸ்ரீ ஆலந்துறையப்பர் திருக் கோயில் அர்ச்சகர் கூறுவதைப் பார்க்கும் பொழுது "அறுபத்து மூவர்பேட்டை என்பது சீகாழிச்சிற்றம்பலநாடிகளிடம் உபதேசம் பெற்ற அடியார்கள் அறுபத்து மூவர் தங்கியிருந்த இடத்தைக் குறிக்கும்" என்று தெரிகிறது. இது குறித்து மேலும் ஆய்வு செய்யவேண்டியுள்ளது.

இவர்கள் எங்குவாழ்ந்தார்கள் என்பது குறித்து ஆய்வுசெய்ய வேண்டியிருப்பினும் இவர்கள் அனைவரும் இறையடிநீழல் அடைய ஜீவசமாதி கூடிய இடம் இந்த சித்தர்க்காடு என்பதில் ஐயமில்லை.

அவிச்சுவையும் தவச்சுவையும் :

குருமூர்த்திகளும் இந்த அடியவர்களும் வாழ்ந்துவரும் பொழுது அன்பர்கள் திருஅமுது செய்யவேண்டி அழைத்தால் அவர் தம் இல்லத்திற்கு எழுந்தருளி மாகேஸ்வர பூஜையை ஏற்று ஆசியருளி வருவது வழக்கம். அங்ஙனம் ஒருநாள் ஓர் அன்பர் தம் இல்லத்திற்கு அழைத்தபொழுது அடியார்களுடன் எழுந்தருளினார்கள் அங்கு அவ்இல்லத்தலைவனுக்கும் தலைவிக்கும் வாழ்வியலில் சிறிதுகருத்து வேறுபாடு இருந்துவந்திருக்கிறது. அதனால் அவ் அம்மையார் "கற்புறு மனைவியாரும் கணவனார்க்கான எல்லாம் பொற்புறு மெய்யுறுமல் பொருந்துவ போற்றிச்செய்து..." என்று திருநீலகண்டரின் மனைவியார் பணிசெய்து வந்ததுபோல் செயல் பட்டுவந்தார். இந்நிலையில் இவர்கள் எழுந்தருளியபொழுதும் தன் கணவனரின் கருத்துப்படி திருஅமுது படைப்பதற்கு, அம்மையார் வேண்டும் உதவிகள் புரிந்தார். நெய் வைக்கும் இடத்தில், அக் காலத்தில், எறும்பு வராமல் இருக்க நெய்க்கிண்ணத்தின்மேல் வேப்பெண்ணெய்க் கிண்ணத்தை வைப்பது வழக்கம் அதுபோல் அவ் இல்லத்திலும் வைக்கப்பெற்றிருந்தது. கணவருடன் பேசாத அம்மையார் படைப்பதற்கு உதவியாக மேலே இருந்த வேப் பெண்ணெய்க் கிண்ணத்தைக் கீழே வைத்து நெய்க் கிண்ணத்தை மேலே எடுத்துவைத்திருந்தார். இதனை அறியாது கணவர் கீழே தானே நெய்யிருக்கும் என்றுகருதி மேலே உள்ள நெய்க் கிண்ணத் தை எடுத்து வைத்துவிட்டுக் கீழே உள்ள வேப்பெண்ணெய்யை நெய் என்று எடுத்துப் படைத்துவிட்டார். அங்கு இருந்த அடியார் கள் யாரும் வேப்பெண்ணெய்ச் சுவைகுறித்து ஒன்றும் கருதாமல் திருவமுது செய்தனர். ஒருவர்மட்டும் வாயில் வைத்தவுடன் " வேப்... " என்றார். உடனே குருநாதர், "அவிச்சுவை அறிவான் தவச் சுவை அறியான்" என்றார். உணவில் இது இனிப்பு, இது கசப்பு, இது துவர்ப்பு என்று அறிதல் தவம் செய்வோர்க்குக் கூடாது என்பது இதன் பொருள். இதனைக்கேட்ட கண்ணப்பர் என்னும் அந்தச்சீடர் பந்தி முடிந்தபின் குருமூர்த்திகளின் திருவடியில் வீழ்ந்து வணங்கிப் பக்குவம் பெறுதற் பொருட்டு மௌனமாக வடக்குநோக்கி யாத்திரை மேற்கொண்டார்.

ஜீவசமாதி கூடியருளல் :

சில ஆண்டுகள் சென்றபின்பு குருநாதர், தாமும் சிரடியார் களும் இறையடி நீழல் அடையும் சமயம் வந்தமையை உணர்ந்து, அரசனை அழைத்து அடியார்களும் தாமும் ஜீவசமாதி கூடுதற்குக் காவிரியின் கரையில் தனித்தனியே இடம் அமைத்துக்

கொடுக்குமாறுபணித்தார். அவ்வண்ணமே அரசனும்நிலவறைகள் 63 அமைத்துக் கொடுத்தான். குருநாதரும் 62 அடியார்களும் அந்த நிலவறைகளில் அமர்ந்து ஜீவசமாதி கூடினர்கள். பின்னே இச் செய்தியை அறிந்த 'கண்ணப்பர் விரைந்து வந்து குருநாதரின் திருமுன்னிலையில் நின்று வடதிசை சென்ற எனக்கு இடம் இல்லையோ' என்று அழுது நிற்கக் குருநாதரின் சமாதிக்கோயில் பிளந்தது; அதிலே இருந்து குருமூர்த்திகள் திருக்கைகளை நீட்டிச் சீடரைத் தம்மிடம் ஐக்கியப்படுத்திக் கொண்டார் என்று கூறப் பெறுகிறது.

இங்கு, ஜீவசமாதி கூடியவர்கள் 60 அடியார்கள் மற்றும் குருநாதர் ஆதலின் எஞ்சிய மூவர் மிஞ்சுகின்றனர். அம் மூவரில் கண்ணப்பர் என்பவர், சென்று, மீண்டு வந்து குருநாதருடன் ஐக்கியமானர். எனவே 61 அடியார்களும் குருநாதருமாக இங்குச் சமாதி கூடியருளினர்கள். இதற்குச் சான்ருகச் சித்தர்க்காடு சிற்றம்பலநாடிகளின் கர்ப்பக்கிரகம் புறச்சுவரில் 61 சிவலிங்கத் திருவுருவங்கள் விளங்குகின்றன. குருநாதருக்குக் கருவறை இலிங்கமும் எஞ்சிய 61 அடியார்களுக்கும் 61 லிங்கங்களுமாக இவை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எஞ்சிய 2 அடியார் களுக்கு அமைந்த குருமூர்த்த ஆலயமே இந்தப் பகுதியிலுள்ள ஸ்ரீ ஆலந்துறையப்பர் திருக்கோயிலும் ஸ்ரீ சம்பந்தர் திருக் கோயிலும் எனக்கொள்ள இடமுண்டு எனினும் இது குறித்து மேலும் ஆய்வு செய்தல் நலமாகும்.

இங்ஙனம், குருமூர்த்திகளும் சீடர்களும் சமாதி கூடியருளிய குருமூர்த்த ஆலயத்தைச்சிவாலயமாக அமைத்துச்சுற்றுப்பரிவாரங் களும் அமைத்து வழிபடும் வழக்கத்திற்கு, இந்தத் திருக்கோயில் களே முன்னேடிகளாக விளங்குகின்றன எனலாம். இந்த அமைப்பை ஒட்டியே தருமையிலும் நமது ஆதின ஆதி பரமாசாரிய மூர்த்தி ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் குருமூர்த்த ஆலயம் சிவாலயமாகத் திகழ்கிறது என அறியக் கிடக்கின்றது.

அருளிய நூல்கள் :

சீகாழிச் சிற்றம்பல நாடிகள் அருளிய நூல்கள் ஐந்து என்பர். அவை :- துகளறு போதம், சென்றகாலத்திரங்கல், நிகழ்காலத் திரங்கல், வரும்காலத்திரங்கல், திருப்புல முறுவல் என்பன. அனுபூதி விளக்கம், சிற்றம்பல நாடிகள் தாலாட்டு, சிற்றம்பல நாடிகள் வெண்பா, சிற்றம்பல நாடிகள் கட்டளை, கலித்துறை என்னும் ஐந்தும் இவர்தம் சீடர்கள் பாடியனவாம்.

இந்நூல்களுள் காணப்படும் சில கருத்துக்களை மட்டும் இப்புனித நாளில் சிந்திப்போம். கழிகாலத்து இரங்கல் என்னும் நூல், தாம் கடந்த காலத்தை எங்ஙனமெல்லாம் வீணே கழித்து விட்டோம் என்று இரங்குகிறார் குருநாதர். திருநீறும் அருள் வேடமும் சேராமல் இருந்தேனே! இவை குறித்துத் தெரியாமலும் வாழ்ந்தேனே! மானிடராய பிறவி எந்தை இறைவனுக்குரிய பணி செய்தற்கு என்று எண்ணாது இருந்தேனே! திருக்கோயிலைச் சூழ்ந்து சிவன் உருவம் இது எனக் கருதி மருட்கோலம் மாற்றாமல் மாண்டு திரிந்தேனே! என்று பலவாறாகத் தம்மைத் தாழ்வு படுத்திக் கூறிக்கொண்டுள்ளார். குருமூர்த்திகள் மக்களின் பொருட்டுத் தம்மேல் ஏற்றிக் கூறிகொண்டுள்ளார்.

திருநீறு அணிவது என்பதில் எத்துணையோ நுட்பமும் திட்பமும் உள்ளன என்பது பலருக்குத் தெரியாது. வெள்ளையாக இருக்கும் ஒருவகைப்பொடி என்று திருநீற்றைக்கருதற்க. இதனைச் செய்யும் முறையைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

திருநீறு தயாரித்தல் :

கன்று ஈன்று 16 நாட்கள் ஆன நிலையிலுள்ள பசுவின் சாணத்தைக் கையிலோ தாமரை இலையிலோ ஏந்திக் கோஜலமும் பசும் பாலும் பெய்து பிசைந்து சிறு சிறு உருண்டையாகச் செய்து காயவைத்து நெல் கறுக்காய்களில் வைத்து மூடி அனல் மூட்டிப் பஸ்மமாக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து அதனை எடுத்துப் பக்குவமாக, புனிதமான இடத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும் இது மிகவும் வெண்மையாக இருக்கும். உடலும் உள்ளமும் சுத்தமாக இருந்து செய்யச் செய்ய இது வெண்மை யாக இருக்கும். இங்ஙனம் செய்துவைத்த திருநீற்றைக் குருமூர்த்திகளின் வழி ஐந்தெழுத்து உபதேசம் பெற்று அவர் களின் அருளாசியுடன் அணிந்துவந்தால் பிணி நீங்கும்! பெருமை மிகும்; மந்திரமும் தந்திரமும் மருந்துமாகிப் பயன்தரும். இங்ஙனம் இல்லாமல் கடையில் விற்கும் வாசனை கலந்த மில் சாம்பலைப் பூசிக்கொள்வதனால் பெரும்பயன் விளையாது. அது பயன் தரவில்லையே என்று வருந்துவதும் முறையன்று.

இங்கு அமைந்துள்ள சித்தர்க்காடு ஸ்ரீ சிற்றம்பல நாடிகள் திருக்கோயிலில் அவர்தம் குருபூஜை விழாவினை இவ்வாண்டு திருவருளால் சிறப்பாக நடத்த முடிந்தது. இதுநாள் வரை இவ் விழாவினை நிகழ்த்தாமல் இருந்தோமே என்று கழிகாலத்திரங்கு வது நம் செயலுக்கும் பொருந்துவதாகிறது.

வாழ்த்து :

இவ்விழாவில் கலந்து கொண்ட அன்பர்களும் பங்குகொண்டு பணி செய்த பக்தர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழவும் இவ்விழா நடைபெறத் துணைநின்ற இப்பகுதி அன்பர்கள் தொடர்ந்து இப்புண்ணியப் பணியில் ஈடுபட்டு நலம்பல பெற்றுச் சிறக்கவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிற்றம்பலம் நாடித் திருவருளைச் சேர்ந்தாரைச்
சுற்றம் பலகூடித் தொழுதருளைப் பெற்றிடுவோம்!

குமரகுருபரர் : சில சிந்தனைகள்

திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்

[தருமை ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் குருபூஜை விழாவினையொட்டி, திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழாவில் 29 – 5 – 88 அன்று ஆற்றிய உரை.]

குமரகுருபரர் ஒரு ஞானக்குழந்தை; தமிழை வளர்ப்பதற்காகவும் தமிழைப் பரப்புவதற்காகவும் இந்த உலகத்தில் அவதரித்த தெய்வக்குழந்தை. தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்தக் குழந்தைக்கு ஒரு முக்கிய இடமுண்டு. இந்தக் குழந்தை இங்கே பிறந்திருக்காவிட்டால் முருகக்குழந்தையின் வரலாற்றைச் சொல்லும் "கந்தர் கலிவெண்பா" நமக்குக் கிடைத்திருக்காது. இந்தக்குழந்தை இங்கே பிறந்திருக்காவிட்டால் "முத்துக் குமார சுவாமி பிள்ளைத்தமிழ்" நமக்குக் கிடைத்திருக்காது. இந்தக் குழந்தை இங்கே பிறந்திருக்காவிட்டால் "சிவகாமி அம்மை இரட்டை மணி மாலை" நமக்குக் கிடைத்திருக்காது.

தமிழ் இலக்கிய வரலாற்றை ஒருமுறை தொடக்கத்திலேயிருந்து நோக்கினால் தமிழ் நாட்டில் தமிழ் வளர்ப்பதற்கென்றே காலந்தோறும் சில குழந்தைகள் பிறந்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது சீர்காழியிலே பிறந்து, தேவார இசைப் பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளிய திருஞானசம்பந்தர் ஒரு குழந்தை; மறைந்து கிடந்த தேவாரத் திருப்பாடல்களை உலகத்திற்கு வெளிப்படுத்திக் கொடுத்த நம்பியாண்டார் நம்பி, பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்ற ஒரு குழந்தை; "சிவஞான போதம்" என்னும் சாத்திரத்தை அருளிச்செய்ததும் மெய்கண்டார் என்ற குழந்தையே. இந்தக் குழந்தைகள் வரிசையில் குமரகுருபரரும் இடம் பெறுகிறார்.

குழந்தையின் மழலை மொழி கேட்பதில் எல்லாப் பெற்றோர்களுக்குமே ஈடுபாடு உண்டு குமரகுருபரரின் பெற்றோர்க்கு அந்த வாய்ப்புக் கிட்டவில்லை. காரணம் குமரகுருபரர் ஐந்து வயது வரை வாய்பேச இயலாதவராகவே வாழ்ந்தார். எல்லாக் குழந்தைகளும் பேசத் தொடங்கும்போது "அப்பா", "அம்மா", "ங்கா", போன்ற எளிய சொற்களையே பேசும். குமரகுருபரர் வாய் திறந்து முதலில் பேசத் தொடங்கிய போதே அது தெய்வப்

பாட்டாகத்தான் வெளிப்பட்டது. அவர் பேசிய முதல் பேச்சே "கந்தர்கலிவெண்பா" தான். இந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ளும்பொழுது நம் மனதில் தோன்றுவது,

"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனுல்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"

என்ற மணிவாசகர் பாடல்தான். மணிவாசகர் மேலும், "ஓராதார் உள்ளத்தொளிக்கும் ஒளியானே" என்றும், பிறிதோர் இடத்தில், "புறத்தார்க்கு சேயோன்" என்றும், இன்னொரு இடத்திலே, "உள்ளானே இல்லானே" என்றும் பாடுகின்ருர். இந்தப் பாடல்களை உற்று நோக்கும் பொழுது நமக்கு விளங்குவது 'கடவுள் உண்டு என்று நினைக்கின்றவனுக்கு இருக்கிருன். இல்லை என்று நினைக்கின்றவனுக்கு இல்லை' என்பது. இதனையே மணிவாசகர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகின்ருர். அது மட்டுமல்ல; அவன் இருக்கின்ருன். அவனுடைய அடிகளை வணங்குவதற்கு நமக்குத் தேவைப்படுவது அவனுடைய அருள், அவனைப் பற்றி நாம் சிந்தித்தால் அவனுடைய அருள் நமக்குக் கிடைக்கும், அவனுடைய அருளாலே அவனை வணங்கலாம் என்றும் கூறுகின்ருர்.

இருக்கிருன் என்பவருக்கு இருந்து, இல்லை என்பவனுக்கு இல்லாமல் இருப்பது எங்ஙனம் என்ற கேள்வி எழலாம். அதற்கு இன்றைய அறிவியல் எடுத்துக்காட்டு ஒன்று கூற விழைகிறேன். நாம் இருக்கின்ற இந்தக் கட்டிடத்திலே திருச்சி வானொலி நிலையத்தின் ஒலிபரப்பானது இருக்கின்றது என்று சொல்கின்றவர்கள்சிலர் இருக்கலாம்; அவர்கள் அந்தஒலிபரப்பைக் கேட்பதற்கு அவசியமான கருவியை தம்மிடம் வைத்திருந்து அந்தக்கருவியைப் பயன்படுத்தித் திருச்சி வானொலி நிலையத்தின் ஒலிப்பரப்பைக் கேட்கமுடியும். அப்படிக் கேட்க முடிந்தவர்கள் திருச்சி ஒலிபரப்பு நிலையத்திலிருந்து அந்த ஒலி அலைகள் இங்கே இருக்கின்றன என்று சொலகில்ருர்கள். ஆனுல் இன்னொருவன் அது இல்லை என்று சொல்கின்ருன் என்று வைத்துக் கொள்வோம். அவனிடம் அந்தக் கருவி இல்லை; ஆதலினுலே அவனுக்கு அதைக் கேட்கமுடியவில்லை. வானொலிப்பெட்டி வைத்திருப்பவரால் திருச்சிநிலைய ஒலிபரப்பைக் கேட்டு அனுபவிக்க முடிகிறது. ஒருவரிடம் வானொலிப் பெட்டி இல்லையென்ருல் அவரால் அனுபவிக்க முடியவில்லை. யாரிடம் வானொலிப் பெட்டி இல்லையோ அவன் திருச்சி வானொலி நிலையத்தின் ஒலி அலைகள் இங்கு இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பான். யாரிடம் அந்த வானொலிப் பெட்டி இருக்கின்றதோ அவன் ஒலி அலைகள் இங்கே இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டிருப்பான். இந்த முறையிலே நாம் சிந்தித்துப் பார்த்தோமானுல் யாரால் அவனை உணரமுடிகின்றதோ அவன்

கடவுள் இருக்கின்றான் என்று சொல்கிறான். யாரால் அவனை உணரமுடியவில்லையோ அவன் கடவுள் இல்லை என்று சொல்கின்றான், என்ற ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ளமுடிகிறது என்று நினைக்கின்றேன்.

குமர குருபரர் தமிழ் மண்ணிலே மட்டும் தமிழைப் பரப்பியவர் அல்லர். அவரது பார்வை, பொதியமலை வட்டாரத்தோடு மட்டும் நின்று விடவில்லை; பொதியத்தைக் கடந்து, இடையே உள்ள விந்தியத்தையும் கடந்து, வடதிசையில் உள்ள இமயம் வரை அவர் பார்வை படர்ந்து சென்றது. காவிரிக் கரையில் மலர்ந்த கன்னித் தமிழ் கங்கைக் கரை வரை செல்ல வேண்டும் என்று அவர் விரும்பினார். எனவே அவர் வடநாட்டு யாத்திரையை மேற்கொண்டார். எனக்குத் தெரிந்த அளவில் தமிழ்நாட்டிலிருந்துவடநாடுசென்றுமடமும்கோயிலும் அமைத்து, சைவநெறியைப் பரப்பிய முதல் துறவி குமரகுருபரரேயாவார்.

குமரகுருபரர் மிகச்சிறந்த தமிழ் ஞானியாக விளங்கினாலும் அவர் தமிழ் என்னும் வட்டத்திற்குள்ளேயே நின்றுவிடவில்லை. தமிழ் நெறியைப் பிறருக்கு உணர்த்த வேண்டுமானால் வேறு மொழிகளையும் கற்றல் வேண்டும் என்று விரும்பினார். காசிக்குச் சென்ற குமரகுருபரர் முகமதிய அரசரோடு பேச விழைந்தார். எம்மொழியில் பேசுவது? இந்தியில் பேசினால்தானே அரசரால் புரிந்துகொள்ளமுடியும்? இந்தியைக் கற்க விழைந்த அவர் "சகல கலா வல்லி மாலை" என்னும் பக்திப்பாடலைப் பாடிக் கலைமகளை வழிபட்டார். கலைமகளின் திருவருளால் இந்திமொழியில் புலமை பெற்றார். முகம்மதிய அரசரிடம் இந்தியிலேயே "கங்கைக் கரையில் ஒரு மடாலயத்தைக் கட்ட விரும்புகிறேன்; அதற்கான இடத்தைத் தந்தருள வேண்டும்" என்று கேட்டார். தமிழ் நாட்டுத் துறவி இந்தியில் பேசியது கண்டு மகிழ்ச்சி அடைந்த தில்லி மன்னர் "உங்களுக்கு எந்த இடத்தில் நிலம் தேவை; காட்டுங்கள்; தருகிறேன்" என்றாராம். நமது குமரகுருபரர் கங்கைக்கரையில் அவர் வேண்டின நிலம் பெற்றார்.

குமரகுருபரர் வெறும் துறவியாக மட்டும் வட இந்தியாவிற்குச் செல்லவில்லை; வடக்கையும் தெற்கையும் இணைக்கும் தூதுவராகச் சென்றார்; இந்தியையும் தமிழையும் உறவாடச் செய்வதற்கு முயன்றார். தமிழ்நாட்டு அருளைத் தில்லி அரசர்க்குக் கொடுத்து, அவரிடமிருந்து வடநாட்டுப் பொருளைப் பெற்றார். அருளைப் பரப்பவும் பொருள் தேவை; அருளையும் பொருளையும் இணைத்த ஆன்மீக ஞானியாகவே குமரகுருபரர் விளங்கினார்.

ஒரு நாடு அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டு மானால் அந்நாட்டு மக்கள் கல்வியிற் சிறந்து விளங்க வேண்டும். "கல்வி இலாத மக்கள் களர் நிலம்" என்று நம் காலத்துப் பாரதிதாசன் பாடியிருப்பதை நாம் அறிவோம். களர் நிலத்தில் எதுவும் முளைக்காது; கல்வி இல்லாத நாட்டில் எந்த முன்னேற்ற மும் உண்டாகாது. கல்வி பற்றியும், கல்வியின் தேவை பற்றியும், கல்வி கற்கும் முறை பற்றியும் மிக விரிவாகப் பேசிய முதல் அருளாளர் குமரகுருபரரேயாவார்.

கல்வியின் பயன் என்ன என்பதைக் குமரகுருபரர் நன்கு எடுத்துக் கூறுகிறார். கல்வி அறத்தைக் கொடுக்கும்; செல்வத்தைக் கொடுக்கும்; வீடுபேற்றைக் கொடுக்கும்; செல்லும் இடமெல்லாம் சிறப்பைக் கொடுக்கும்; வாழ்வில் கவலை நேரும்போது கை கொடுத்து உதவும்; குறைந்த வாழ்நாளை உடைய இந்த மனிதர் களுக்குக் கல்வியைக் காட்டிலும் சிறந்த துணை வேறு இல்லை என்கிறார் அவர்.

" அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும்; கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை "

கல்வி அறம் தரும்; இன்பம் தரும்; கவலை நீக்கும் என்ப தெல்லாம் மிகப் பழைய சிந்தனைகளே. "கல்வி பொருள் தரும்" எனும் சிந்தனை குமரகுருபரர் காலத்தில் முற்றிலும் புரட்சிகரமான சிந்தனை என்பதில் ஐயமில்லை. பதினேழாம் நூற்றாண்டில் "கல்வி யைக் கற்றால் செல்வத்தை ஈட்டலாம்" என்று குமரகுருபரர் கூறியிருக்கிறார் என்றால் அது ஒரு வகையில் புரட்சிகரமான சிந்தனை என்றே கூறல் வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் கல்விச் செல்வத்தைப் பெற்று வாழ்வின் சகலவிதமான துறைகளிலும் முன்னேற வேண்டும் என்று அவர் விழைந்ததையன்றோ இப் பாட்டுக் காட்டுகிறது?

கல்விக்கு எல்லையில்லை; கல்வியின் எல்லை கண்டவர் யாரும் இலர். எனவேதான் கல்வியைக் கடல் என்று உருவகித்தார்கள் நம் பண்டைப் புலவர்கள். இன்று அறிவுத் துறைகள் மிகப் பலவாகப் பெருகிவிட்டன ஒவ்வொரு அறிவுத்துறையும் வளர்ந்து வளர்ந்து பலப்பல கூறுகளாகப் பிரிந்து போய்க் கொண்டேயிருப்பதைப் பார்க்கிறோம். எனவே இக் காலக் கல்வியில் ஒவ்வொருவனும் ஏதோ ஒரு துறையில் தான் வல்லவனாக ஆக முடியும். எல்லாத் துறையிலும் வல்லவனாக ஆதல் முடியாது. இதைத்தான் குமரகுருபரர்

" முற்றும் உணர்ந்தவர் இல்லை; முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க "

என்று கூறுகிறார். "எல்லாம்அறிந்தவர்கள் யாரும் இல்லை; எனவே நாம் அனைத்தையும் கற்றிருக்கிறோம் என்று செருக்குக் கொள்ள வேண்டா" என்கிறார் அவர். குமரகுருபரர் கல்வி பற்றிச் சிந்தனை செய்த அருளாளர் என்னும் வகையில் அவர் நம்மை மேலும்

கவர்கிறார். அன்புடைப் பெருமக்களே! உங்களோடு சேர்ந்து குமரகுருபரர்பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்புக்கிட்டியமைக்கு மகிழ்கிறேன். நான் உங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு மணிவாசகரின் அறிவுரை தெரியும்.

அவர், 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ,வேண்டும் அயன்மாற் கரியோய் நீ,வேண்டி என்னைப் பணி கொண்டாய் வேண்டி நீ, யாதருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால் வேண்டும் பரிசொன்றுண்டென்று உண்டெனின் அதுவும் உந்தன் விருப்பன்றே'' என்று கூறியிருக்கிறார். நாம் வேண்டத்தக்கது எது என்பது அவனுக்குத்தான் தெரியும். இருந்தாலும் நான் இப்பொழுது கூறிக்கொள்ள விழைவது ஒரு வேண்டுகோள்! அந்தவேண்டுகோளை நீங்கள் நிறைவேற்றி வைக்க ஆண்டவன் அருள் புரிவான் என்று நம்புகிறேன்.

குமரகுருபரரின் பெருமையை இந்திய நாடு உணரவேண்டும், அவரது உபதேசங்களை இந்தியநாட்டு மக்கள் அனைவரும் உணருமாறு செய்யவேண்டும். அதற்கென்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி இமயம் முதல் குமரிவரை அதன் கிளைகள் அமையுமாறு நாம் ஏற்பாடு செய்தல்வேண்டும். அவரது கருத்துக்களை இன்றைய வாழ்க்கையோடு பொருத்திக்காட்டி விளக்கம் சொல்கிற அறிஞர் உருவாக வேண்டும். இந்திய நாட்டு மொழிகள் அனைத்திலும் அவரது நூல்கள் மொழி பெயர்க்கப்படல் வேண்டும்.

குமரகுருபரர் கி. பி. 1688 இல் மறைந்ததாகச் சொல்லப்படுகிறது; அவர் முத்தி பெற்றுச் சரியாக முந்நூறு ஆண்டுகள் ஆகின்றன. இந்த முந்நூறுவது ஆண்டினை நாம் நாடு முழுதும் சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டும். (தமிழ்ப் பேரறிஞர் வித்துவான் மு. அருணசலம்பிள்ளை அவர்கள் குமரகுருபரர் முத்தியடைந்த முந்நூறுவது ஆண்டு நினைவாக விழா ஒன்று ஏற்பாடு செய்தல் வேண்டும் என்று எங்கள் பல்கலைக்கழகத்தைச் சுமார் ஆறு மாதங்கட்கு முன்னர் அணுகியதாக எங்கள் தமிழ்ப் பேராசிரியர் கூற நான் அறிந்தேன். தருமை ஆதீனக் குருமகா சந்நிதானம் அவர்களும் பல்கலைக்கழகத்திற்கு இதுபற்றி 16—1—88 அன்று ஒரு மடல் எழுதுவித்திருக்கிறார்கள்). எங்கள் பல்கலைக் கழகத்திலும் குமரகுருபரர் நினைவாக ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்யஇருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். பாவேந்தர் பாரதிதாசன் குமரகுருபரரின் கவித்திறத்தில் உள்ளம் பறிகொடுத்து அவரைத் தம் காப்பியம்ஒன்றில் பாத்திரமாக ஆக்கிப் போற்றியிருக்கிறார். குமரகுருபரரின் சிந்தனைகளை இந்தியப் பெருநாடு விரைவில் உணரவேண்டும் என்பதே என் ஆசை.

வாழ்க குமரகுருபரர்! வளர்க அவர்காட்டிய தமிழ்நெறி!

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit.,
Ph.D., D. P. P. A., D, U. N., I, B.
பருத்தியூர்.

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர் தம்கோன்,
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

அ. சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலையே.

(1) சாதனையாளர்களும் புண்ணியவான்களும் ஆகியஎண்ணற்றோர் அபிராமி என்னும் பெண்ணினைப் போற்றிப் பணிகின்றனர்.

(2) அம்பிகையை வழிபட்ட முதல் அடியார்களாகிய பன்னிருவரைக் குறிப்பிட்டு அவர்களைச் சாதித்த புண்ணியர் என்று புகழ்கிறார். புராரி, கணபதி, பிரமன் ஆகிய மூவருக்குப் பதிலாக உலோபாமுத்திரை, மனு, துருவாசர் என்ற வேறுமூவரைச் சேர்த்து. அப்பன்னிருவரே அம்பிகையின் மந்திரங்களை உலகுக்கு அளித்த முதல் உபாஸகர்கள் என்று சாக்த நூல்கள் கூறும்.

இங்குக் குறிப்பிட்ட பன்னிருவரையும், எண்ணிலாத பிற அடியார்களையும் சாதித்த புண்ணியர் என்றார். முத்தியளிக்கத்தக்க அம்பிகை வழிபாடு இயற்றும் பேறு பல்வேறு பிறவிகளில் செய்த புண்ணியம், தவம் முதலிய சாதனைகளால் வாய்க்கும், ஆகவே அவர்களைச் சாதனையாளர்கள் என்றும் புண்ணியவான்கள் என்றும் புகழ்ந்தார்.

(3) கல்லாதவர்களும், இல்லாதவர்களும் கையாலாகாதவர்களும் பாமரர்களும் தான் இறைவழிபாடு நடத்துவர் என்பதில்லை, சந்திர மண்டலத்தில் முதல் முதல் காலடி வைத்த மாபெருஞ் சாதனையாளர் நெயில் ஆம்ஸ்ட்ராங் இறை ஈடுபாடு மிகக்கொண்டு தற்சமயம் பாதிரியாராகவும மாறிவிட்டார் என்று அறிகிறோம்,

அதுபோல் அன்றும் இன்றும் என்றும் சாதனைகள் புரிந்தோர் அம்பிகையைப் போற்றுகின்றனர். அவரவர் துறையில் சாதனை புரிந்த பன்னிருவரை இப்பாடலில் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

ஆ. ஆதித்தன், அம்புலி, அங்கி போற்றுவர்.

(1) ஆதித்யன் எனப்படும் சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களும் இறைவியைப் போற்றுகின்றனர்.

(2) கோள்களுக்குள் முதன்மை பெற்று, பிற கோள்களைத் தன்னைச் சுற்றி இயங்கச்செய்து ஆதிபத்யம் (தலைமை) பெற்ற சூரியனை ஆதித்தன் என்றார். குளிர்ந்த நிலவினைப் பொழிந்து குழந்தைகளை மகிழ்விக்கும் சந்திரனை அம்புலிஎன்றார்,தீக்கடவுளான அக்கினியை அங்கி என்றார்.

(3) ஆற்றல், ஒளி, வெப்பம் முதலியவுடைய முச்சுடர்களையும் அம்பிகை தன் முக்கண்களாகப் பெற்றிருக்கிறாள். முச்சுடர்களின் மண்டலங்களில் அவள் எழுந்து அருளுகிறாள். அப்பேறு பெற்ற சுடர்கள் மூன்றும் சாதித்த புண்ணியர்கள் ஆயினர்.

இ. குபேரன், அமரர் தங்கோன் போற்றுவர்.

(1) அளகாபுரிக்கு அதிபதியான மாபெருஞ் செல்வன் குபேரனும், தேவர்களின் தலைவனான இந்திரனும் அன்னையைப் போற்றுகின்றனர்.

(2) சங்கநிதி, பதுமநிதி முதலான செல்வம் அனைத்தும் பெற்று, திருமகள் கேள்வனான திருமாலுக்கே (கோவிந்த ராஜனுக்கே) கடன் கொடுக்கும் அளவிற்குச் செல்வத்தைச் சேர்த்த சாதனையாளன் குபேரன். அவன் அம்பிகையைப் போற்றுகின்றான்.

(3) ஆயிரம் அச்வமேதயாகமும் பிற சாதனைகளும் செய்து இந்திரப் பதவியைப் பிடித்தது அமரர்தங்கோனின் சாதனை. சாதனையால் பெற்ற பதவியின் பெயரால் அவனை 'அமரர் தங்கோன்' என்றார்.

ஈ. போதிற் பிரமன், புராரி முராரி போற்றுவர்.

(1) தாமரை மலரில் உறையும் பிரமன், முப்புரமெரித்த பிரான்,முரனை அழித்ததிருமால் ஆகிய முதல் மூவரும் அன்னையைப் போற்றுகின்றார்.

(2) "உள்ளந்தான் கவ்வ ஒரு சிறிதும் கூடாத
கொள்ளைப் பெரியவுருக் கொண்ட பலகோடி
வட்ட உருளைகள் போல் வானத்தில் அண்டங்கள்
எட்ட நிரப்பி அவை எப்போதும் ஓட்டுகின்றாய்

எல்லா மசையில் இருப்பதற்கே சக்திகளைப்
பொல்லாப் பிரமா! புதத்திவிட்டாய்! அம்மாவேச!
சாலமிகப் பெரிய சாதனைகள் இஃதெல்லாம்
தாலமிசை நின்றன் சமத்துரைக்க வல்லார்யார்?''

என்பார் பாரதியார். அங்ஙனம் சாதனைபுரிந்த சதுர்முகப் பிரமன் தையலைப் போற்றுகின்றான்.

(3) ஆயிரம் ஆண்டுக்கொருமுறையே சேரும் முப்புரங்களை முறுவலால் எரித்தது ஈசனின் சாதனை. அல்லது முப்புரமென்னும் மும்மலகாரியத்தை நீக்கும் வல்லமைதான் அவனது சாதனை.

(4) முரன் என்பவன் திருமாலிடம் போரிட்டு அழிந்த ஓர் அரக்கன். முரனை அழித்த சாதனையால் பெற்ற 'முராரி' என்ற பெயரால் திருமாலைக் குறித்தார்.

உ. பொதியமுனி போற்றுவார்.

(1) தென்பொதிகை மலையில் வாழ்ந்திருந்த அகத்தியமுனிவர் அம்பிகையைப் போற்றியவர்.

(2) பூமியினைச் சமன் செய்ய இறைவனால் அனுப்பப்பட்ட அகத்தியர் தமிழ்நாட்டில் பொதிகைமலையில் தங்கியிருந்ததால் அவரைப் பொதியமுனி என்றே அழைத்தனர்.

பொதிகைக்கு வரும் வழியில் கிரவுஞ்சமலையின் செருக்கினை அடக்கினர். வில்லவன் வாதாபியை அழித்தார். பொதிகையில் இருந்து நீண்டதமிழால் உலகை அளந்தார். காவிரி கொணர்ந்தார். இமயம்முதல் பொதிகை வரை நடந்த வழியெல்லாம் புண்ணியமும் சாதனையுமே புரிந்த அகத்தியரைப் பொதியமுனி என்றே பட்டரும் குறித்தார்.

ஊ. காதிப் பொருபடைக் கந்தன் போற்றுவார்.

(1) மோதிப் போரிட்டு வெல்லும் வேலியினையுடைய முருகப் பெருமான் அம்பிகையை வழிபட்டான்.

(2) 'காதுதல்' என்றால் 'மோதுதல்' என்பது பொருள். மோதிப் போரிட்டு வெற்றி கொள்ளும் வேலினைக் 'காதிப் பொரு படை' என்றார். முருகனின் வெற்றிக்கும் புகழுக்கும் காரணமாக நின்ற வேலினை இங்குச் சிறப்பித்தார்.

(3) அசுரர் குலமடங்க அவ்வேல் கொண்டு பொடியாக்கினன் கந்தன். எதிரிகளின் ஆற்றலை வற்றச் செய்பவன் என்ற பொருளில் முருகனுக்குக் கந்தன் என்ற திருநாமம் உண்டாயிற்று. படைக் கலத்தின் சாதனையும் அதனை ஆள்பவனின் சாதனையும் தோன்றக் 'காதிப் பொருபடைக் கந்தன்' என்றார்.

எ. கணபதி போற்றுவார்.

(1) அக்கந்தனுக்கு மூத்தவனும் சிவகணங்களுக்குத் தலைவனுமாகிய விநாயகர் பெருமான் போற்றுகிறான்.

(2) சிவகணங்களுக்குத் தலைமை ஏற்கும் மிக உயர்ந்தநிலையைப் பெற்றது விநாயகனின் சாதனை ஆகும். 'அதிதீரன்' என அருணகிரியார்புகழும் விநாயகனை, கணபதி என்றே குறிப்பிட்டார்.

ஏ. காமன் முதல் சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர்.

(1) மன்மதன் தொடங்கி மேற்கண்டோர் உள்ளிட்ட சாதனையாளர்கள் தையலைப் போற்றுகின்றனர்.

(2) இங்குக் "காமன் முதல் சாதித்த புண்ணியர்" என்று மன்மதனுக்கு முதல் இடம் கொடுக்கிறார். தேவி உபாஸகர்களில் மன்மதனுக்குச் சிறப்பான இடம் உண்டு. அவனே சில தேவி மந்திரங்களுக்கு 'ரிஷி' யாகவும் இருக்கிறான். அபிராமி அந்தாதியில் பன்னிரு அடியார்களையும் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார் பட்டர். ஆனால் ஆதி சங்கரர் தனது சௌந்தரிய லகரியில் மன்மதன் அம்பிகை வழிபாட்டால் பெற்ற சிறப்பினை மட்டும் எடுத்துக் கூறி அமைகிறார். வளைத்தால் ஒடியும் கரும்பு வில், முகர்ந்தால் வாடிடும் அரும்புகள், உருவமற்ற மாருத மென்னும் தேர் போன்ற புல்லிய பொருட்களைத் துணையாகக் கொண்டு அனங்கனாக இருந்தபடியே அவன் அனைவரையும் ஆட்டிப் படைக்கிறான். தையலைப் போற்றி அவன் பெற்ற வல்லமையினை இவ்வாறு புகழுகிறார் ஆதிசங்கரர். மற்றும் சக்தியும் சிவனும் பிரிந்தகாலத்தில் உலக இயக்கத்தின் பொருட்டு அவர்களை இணைத்துவைக்கும்பணியில் தன்னையே ஆத்ம நிவேதனம் செய்து கொண்ட சாதனையாளன் மன்மதன். 'காம பூஜிதா'-மன்மதனால் வழிபடப்படுபவள் என சகஸ்ரநாமம் உரைக்கிறது. தன்னலமற்ற தியாகத்தால் உயர்ந்ததால் அவனை முன்னிறுத்திக் "காமன் முதல் சாதித்த புண்ணியர்" என்றார்,

(3) எடுத்துக் காட்டாகவே பன்னிருவரை உரைத்தார். மேலும்எண்ணற்ற சாதனையாளர்களும் புண்ணியர்களும் போற்றிய வரலாறுகளை, தேவிபாகவதம் போன்ற நூல்களில் காணலாம். அவர்களின் போற்றுதல் இன்றும் தொடருகிறது. ஆதலால் போற்றினர் என்னாது 'போற்றுவர்' என்கிறார்.

(4) "ஒவ்வொரு ஆணின் சாதனைக்குப் பின்னும் ஒருபெண் உண்டு" என்று ஒரு வழக்கு இருக்கிறது. அப்பெண் பராசக்தியாகிய 'தையல்' என்கிறது அந்தாதி. புண்ணிய வான்களும் சாதனையாளர்களும் பெண்மையைப் போற்றுகின்றனர் என்ற பொதுவான கருத்தையும் 'போற்றுவர் தையலையே' என்றசொற்றொடர் உணர்த்துகிறது. தத்தமது துறையில் 'சாதனையாளர்' என்ற உயர்ந்தநிலை எய்துதலே இப்பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 7. பக்கம் 364 இன் தொடர்ச்சி.)

3. அரிஸ்டாட்டில் (Aristotle)

(கி. மு. 384–322)

'அகாடெமியில்' அரிஸ்டாட்டில் :

கி. மு. 366 இல் பிளேட்டோவின் 'அகாடெமியை' ஓர் இளைஞன் அணுகி, மெட்ரிகுலேஷன் பகுப்பிற்கு விண்ணப்பித்தான். அவன் மேஸிடோனியா நாட்டு (Macedonia) ஸ்டாகிரா (Stagira) நகரைச் சேர்ந்தவன். இந்நகரம் அகீனிய உலகத்தின் "மேலோங்கு மேற்கு" (Wild West) என அந்நாளில் அழைக்கப்பட்டது. நாடி ஏதென்ஸ் வந்த அவ்விளைஞன், நாகரிகத்தின் நல்லதொரு சித்திரமாகத் திகழ்ந்தான். இவன் இளமை முதற் கொண்டே நல்ல பண்பட்டசூழ் நிலையில் வளர்க்கப்பட்டவன். இளைஞனின் தந்தையோ மேஸிடோனியா மன்னனின் அரசவை மருத்துவர். (Court Physician) அந்நாட்டு மன்னன் அமிண்டாஸ் (Amyntas) மகா அலெக்ஸாந்தரின் பாட்டனார். இவ்விளைஞன் குழந்தைப் பருவம் முதல் மன அடக்கத்திலும் உடல் பயிற்சியிலும் நற்பயிற்சி பெற்றிருந்தான் (trained in mental discipline and physical comfort). விண்ணப்பம் செய்த இளைஞன் பெயர் அரிஸ்டாட்டில் (Aristotle).

அரிஸ்டாட்டில் 'அகாடெமியில்' பயிலும்கால் நம்ப முடியாத அளவுக்கும நல்ல தம் பெருந்திறமையை வெளிப்படுத்தினார். ஒருமனம், பற்பல துறைகளில் ஈடுபடுவது இயலாததொரு செயலாகும். அரசியல் (Politics), நாடகம் (Drama), கவிதை (Poetry), பௌதீகம் (Physics). இயற்கை வரலாறு (Natura) History), கணிதம் (Methematics), மருத்துவம் (Madicine), மனோ தத்துவம் (Psychology), வரலாறு (History), உடற்கூறு இயல்,

(Biology), தருக்கம் (Logic), வானியல் (Astronomy), சொற் பயிற்சிக்கலை (Rhateric) – இத்துறைகள், அரிஸ்டாட்டில் பயின்ற பல துறைகளில் சிலவாம். கல்வியில் அவருக்கு இருந்த கடும்பசியைத் தீர்த்துக் கொள்ள இத்தனைவிதமான வகைவகையான உணவு அருந்தி இன்புற்ருர் அரிஸ்டாட்டில். ஒருமுறை பிளேட்டோ இப்படி வேடிக்கையாக அகாடெமியைப்பற்றிக் கூறினுர் எனச் சொல்வதுண்டு. "இந்த அகாடெமி இரு பிரிவுகளாக உள்ளது; மற்றமாணுக்கர்கள் எல்லாம் அனைவரும் சேர்ந்து அகாடெமியின் உடலாக இருக்கின்றனர். அரிஸ்டாட்டில் மட்டும் அகாடெமியின் மூளையாக இயங்குகிருன்" என்பாராம்.

பிளேட்டோவின் மறைவுக்குப் பின் :

கி.மு. 347 இல் பிளேட்டோ இயற்கை எய்தினுர். அரிஸ்டாட்டில் பிளேட்டோவிற்குப்பின் அகாடெமியின் தலைமை தனக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்தார். ஆனல் நடந்தது வேறு. பிளேட்டோவின் உயில்படி பிளேட்டோவின் மருகன் ஒருவனே தலைமையைப் பெற்ருன். அரிஸ்டாட்டில் அதிர்ச்சி அடைந்தார். அவர் 'அகாடெமி' ஆட்சியாளர்களால் ஓர் அன்னியராகவே கருதப்பட்டார். எனவே அரிஸ்டாட்டில் ஏதென்ஸை விட்டு வெளியேற வாய்ப்பொன்றை எதிர்பார்த்து நின்ருர். 'அகாடெமி'யில் அரிஸ்டாட்டிலுடன் பயின்றவன ஹெர்மியாஸ் (Hermeias). இவர் ஆசியாமைனரில் (Asia Minor) ஒரு பெரிய எஸ்டேட்டை விலைக்கு வாங்கினுன். ஹெர்மியாஸ் அரிஸ்டாட்டிலை அங்குவருமாறு அழைப்புவிடுத்தான். அரிஸ்டாட்டில் அந்த அழைப்பினை ஏற்ருர். ஏதென்ஸை விட்டு வெளியேறினுர். பிளேட்டோ டையோனியஸ் அழைப்பை ஏற்று சிராகூஸ் சென்றது போல, அரிஸ்டாட்டில் தம் அருமை நண்பர் அழைப்பை ஏற்று ஆசியாமைனர் சென்று தம் கோட்பாடுகளைச் சோதித்து நடைமுறைப் படுத்த ஒரு வாய்ப்பாகக் கொண்டார்.

அங்கு அரிஸ்டாட்டில் தம் அரிய தத்துவத்தைச் சோதிக்க வாய்க்கவில்லை. ஹெர்மியாஸின் வளர்ப்புப் பெண்ணை அரிஸ்டாட்டில் நேசித்தார் – அவர் காதலில் வெற்றி கண்டாரே ஒழிய கருத்துக்களைச் சோதிப்பதில் வெற்றி காண முடியவில்லை. தோல்வியே கண்டார் எனலாம். மற்ருெரு அதிர்ச்சியும் அவருக்காகக் காத்திருந்தது. பொரஷியமன்னன ஹெர்மியாஸ் சிறுநாட்டின் மீது சினங்கொண்டு படை எடுத்தான. அவனைக் கைது செய்தான்; பின் தூக்கிலிட்டான். அரிஸ்டாட்டில ஆசியாமைனரை விட்டு வெளியேற வேண்டிவந்தது. ஆனல் அரிஸ்டாட்டிலின் நண்பன் அவருக்குப் பெண்ணைத் திருமணம புரிந்துகொடுத்தபோது நிறைய

சீதனம் நல்கியிருந்தான்; அந்தச் சொத்தை அரிஸ்டாட்டில் முதலீடு செய்துவைத்திருந்தார். தற்போது அரிஸ்டாட்டில் சரண்புக ஒரு நாடின்றிச் சஞ்சலம் கொண்டார்.

அரிஸ்டாட்டிலின் அரும்பணிகள் :

இம்முறையும் அரசபரம்பரையைச் சேர்ந்த ஓர் ஆசாமி உதவ முன் வந்தான். அரிஸ்டாட்டிலின் தந்தை மெஸடோனிய அரசன் அமிண்டாஸிடம் அரசவை மருத்துவராக இருந்து பணி ஆற்றினார் அல்லவா? அதன் பின் மன்னன் பிலிப் (King Philip of Macedon) அரியணை ஏறினான். அவன் தன் பிள்ளை அலெக்ஸாண்டருக்குக் கற்பிக்க ஆற்றல் மிக்கதோர் ஆசான் தேவைப்பட்டது. அரிஸ்டாட்டிலுக்கு அப்பணியை ஏற்குமாறு அழைப்பு வந்தது. அரிஸ்டாட்டில் ஏற்றுக் கொண்டார். பிற்காலத்தில் மகா அலெக்ஸாண்டர் எனப் புகழ்பெற்ற இளைஞருக்கு அரிஸ்டாட்டில் ஆசானாகப் பொறுப்பேற்றார். ஆனால் அரிஸ்டாட்டிலுக்கு மெஸடோன் நாட்டுச் சூழல் மேலானதாகப் படவில்லை. "நீரற்ற குளத்தில் ஒரு மீன்போல" நிம்மதியற்ற நிலையிலே தான் அங்கு வாழ்ந்தார். மன்னன் பிலிப் சீரிய அறிவு மிக்கவனாக இருந்தான். எனினும் சிறப்பான கல்வி கற்றவன் அல்லன். எனவே தத்துவத்தில் ஈடுபடும் தன்மையற்றவனாகவே இருந்தான் அரசன். பேரரசு (Empire) ஒன்றை நிறுவவேண்டும் என்ற பேராசையுடையவனாக பிலிபமன்னன் இருந்தான். எனினும் தன் மைந்தன் ஒரு தத்துவ மேதையாகச் சிறக்கவேண்டும் என்றசிந்தையும் கொண்டிருந்தான். ஆனால் அலெக்ஸாண்டரோ "அடங்காததொரு பயங்கரமான சிங்கக் குட்டியாகவே" (the untamed cub of a ferocious lion) வளர்ந்து வந்தான். அதற்கேற்ப அரசவையும் ஓர் ஆரண்யம்போல விளங்கியது. அங்கு எப்போதும் சண்டைகளும், போராட்டங்களும், விபசாரமும், கொலைகளும் தாண்டவம் ஆடின. ஒரு ராஜாங்க விருந்தில், தன்பிள்ளை தன்னை அவமதித்து விட்டான் என்று ஆத்திரமுற்ற பிலிப், அலெக்ஸாண்டரைக் கொன்று விடவும் முயன்றான். இடையில் இருந்த பணியாட்கள் இருவரையும் விலக்கி விட்டு அமைதிப்படுத்தினர். பிலிப்பின் மரணத்திற்குப்பின் பிள்ளை அலெக்ஸாண்டர் அரியணை ஏறினான். தன் தந்தையின் கனவாகிய ஏகாதிபத்தியத்தை நிறுவ அலெக்ஸாண்டரும் முற்பட்டான். மகா அலெக்ஸாண்டர் (Alexander the Great) என்ற மாண்பையும் கொண்டான். அவன் தத்துவ நாட்டம் தேய்ந்தது. கேலிஸ்தீனஸ் (Callisthenes) என்ற ஒரு தத்துவமேதையைத் தூக்கிலிட்டான் அலெக்ஸாண்டர். அரிஸ்டாட்டில் மனம் தளர்ந்தார். மெஸடோன் நாட்டை விட்டு வெளியேற முடிவெடுத்தார் அரிஸ்டாட்டில்.

அரிஸ்டாட்டிலின் "லைஸியம்" :

சிறந்த அனுபவத்தோடு ஏதென்ஸ் திரும்பினார் அரிஸ்டாட்டில். ஏதென்ஸில் இருந்தவாறு ஏற்றமுற ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அவர்பால் தற்கால மதிப்பின்படி 4 மில்லியன் டாலர் பணம் இருந்தது. ஓர் ஆயிரம் உதவியாளர்களை நியமித்துத் தன் விஞ்ஞான ஆராய்ச்சியைத் தொடங்கினார். பல நாடுகட்கும் அவர்களை ஆய்வு புரிய அனுப்பிவைத்தார். "தத்துவக் கலைக்களஞ்சியம்" (Philosophical Encyclopaedia) ஒன்றைத் தயாரிக்கவும் முயற்சிகள் மேற்கொண்டார்.

அரிஸ்டாட்டில் முதன்மையான ஓர் ஆசான். தான் பிளேட்டோவின் "அகாடெமி"யின் அதிபதி ஆகமுடியாமல் போனது ஓர் ஆதங்கமாகவே அவர் நெஞ்சில் நிலைத்தது. "அகாடெமி"க்குப் போட்டியாக ஒரு கலாசாலை நிறுவ அரிஸ்டாட்டில் ஆசைப்பட்டார். அபோலோ லைஸியஸ் (Appollo Lyecus) என்ற கிரேக்கக் கடவுளுக்கு ஓர் ஆலயம் நிறுவி, அக்கடவுள் பெயராலேயே அற்புதமான ஒருகலாசாலையும் அமைத்தார். அரிஸ்டாட்டில் அதற்கு 'லைஸியம்' எனப் பெயரிட்டார். அஃதொரு பல்கலைக்கழகம்போலப் பலதுறைகள் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் அதில் சேர்ந்தனர். அறியாமைப்பேயை விரட்ட அதன்மூலமமுயற்சி மேற்கொண்டார் அரிஸ்டாட்டில். லைஸியத்தில் ஒரு நல்ல அமைப்பை அரிஸ்டாட்டில ஏற்படுத்தினார். கலாசாலையில் காலை நேரத்தில் தொழில் நுட்பக்கல்வி (Technical Course) பயிற்றுவித்தார். பிற்பகலில் புகழ்பெற்ற தம் சொற்பொழிவுகளைப் புகுத்தி ஞானவேள்வி நிகழ்த்தினார்.

அரிஸ்டாட்டில் தம் சொற்பொழிவுகளை ஒரு புதிய அமைப்பில் வழங்கினார். அதற்கு நடமாடும் பள்ளி - "பெரிப்பேடடிக் ஸ்கூல்" (Peripatetic School) என்றும் அம்முறைக்கு 'பெரிபட்டேடிக் முறை' என்றும் பெயர் வந்தது. ஓரிடத்தில் அமர்ந்தவாறு அரிஸ்டாட்டில் தம் சொற்பொழிவுகளை ஆற்றவில்லை; நடந்துகொண்டே பேசினார்; நடந்துகொண்டே வினாக்களுக்கு விடைதந்தார் அவரது தத்துவக் கோட்பாடுகளையும் போதனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சிந்தித்துப் பார்ப்போம்.

அரிஸ்டாட்டிலின் இறுதிக்காலம் :

அரிஸ்டாட்டில் மெஸிடோன நாட்டில் பல்லாண்டுக்காலம் அலெக்ஸாண்டருக்கு ஆசானாகப் பணியாற்றினார் அல்லவா? பின் மகா அலெக்ஸாண்டர் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தக்

களவுகண்டான். கிரேக்க நாடுகள் மீதும்கூட படை எடுத்து வென்ருன். எனவே அரிஸ்டாட்டில் ஏதென்ஸில் கலாசாலை வைத்துக் காரியம்புரிந்து வருகையில் அரசியல்வட்டாரங்கள் அரிஸ்டாட்டிலைச் சந்தேகக் கண்ணேடு பார்த்தனர். அலெக்ஸாண்டரின் ஓர் ஒற்றனுக அரிஸ்டாட்டிலை எண்ணினர். இதை விசாரணைக்குக் கொண்டுவர முயற்சிகள்மேற்கொண்டனர். பாவம்! அரிஸ்டாட்டில் சாக்ரட்டீஸுக்கு ஏற்பட்ட கதியைச் சற்றும் மறக்கவில்லை. எனவே அவர் இரகசியமாக ஏதென்ஸ் நகரைவிட்டு வெளியேறினர். ஏதென்ஸைவிட்டு வெளியேறிய ஓராண்டுக்காலத்தில் அரிஸ்டாட்டில் இயற்கை எய்தினர். அவர் தமது 62 - ஆவது வயதில் கி. மு. 322இல் இறந்தார் என வரலாற்றுஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அரிஸ்டாட்டில் ஏறத்தாழ நானூறு நூல்களை (ஆயிரம் நூல்கள் என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்) ஆக்கித் தந்துள்ளார். மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டம் பற்றியும் ஒவ்வோர் அறிவுநிலை பற்றியும் அரிஸ்டாட்டில் நூல்கள் யாத்துள்ளார் என்ருல் அதுமிகையாகாது. அரசியல், இயற்கை வரலாறு, தருக்கம் (Lugic) விஞ்ஞானம், சிந்தனை, சொற்பயிற்சித்திறம் (Rhetoric) நீதி சாத்திரம், கணிதம், பௌதீகம், வானசாஸ்திரம், மனேதத்துவம், தத்துவ சாத்திரம், கவிதை இயல்போன்ற பற்பல துறைகளில் அரிஸ்டாட்டில் தம் அறிவுத்திறத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றுதான் குறிப்பிடவேண்டும்.

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E. Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Biographies of Great Philosophers by Thomos &Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.

(தொடரும்)

கட்டுரை எண். 7.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞானபோதம் முதல்நூல் என்பதும் சிவஞான சித்தியார் வழிநூல் என்பதும் போதத்திற்குச் செய்யுளாலான உரைநூல் என்று கூறும் அமைப்பு உடையது சித்தியார் என்பதும் முன்னரே சிந்திக்கப்பெற்றன. இனி, நூற்பாவின் சொல், பொருள் ஆகியன வற்றில் அமைந்த இணைப்பினை முறையாக எண்ணலாம்.

சிவஞானபோதம் - முதல் நூற்பா :

பதி உண்மை பேசுவது முதல்நூற்பா. இந்தப் பிரபஞ்சம் கண்ணால் காணப்படுவது. இது அவன், அவள், அது என்னும் மூன்று அவயவப்பகுப்புடையது. காணுதற்குப் பிரபஞ்சம் ஒன்றே யாயினும், இதற்குள் அடங்கிய உயிர்த்தொகுதிகளின் அமைப்பினை மூன்று வகைகளில் அடக்கி விடலாம் என்பதற்கு அவன், அவள், அது என்னும் பிரிவுப் பொருள் விளக்கம் தேவைப்படுகிறது. உயிரில் அவன், அவள், அது என்னும் பகுப்பு இல்லையாயினும் அவ்வுயிர் எடுத்துவந்த உடலில் இப்பகுப்பு உண்மையை யாரும் மறுக்கமுடியாது. இதனாலேயே மெய்கண்டார் கண்ணால் காணப் படும் உலகம் இந்தமூன்று பகுப்பில் அடங்கும் தகையது என்பதனை "அவன் அவள் அது எனும"... என்று முதலில் இவ்வுலகத்தை விளக்கினார். இத்தகைய உலகம், மூன்றுசெயற்பாடுகளை உடையது. அவை : தோன்றுதல், இருத்தல, அழிதல் என்பன. இங்ஙனம் புடைபெயர்ச்சியளவில், தோன்றி, இருந்து, அழியும் தன்மை இவ் வுலகிற்கு இருப்பதனால் இது ஒருவனால் படைக்கப்பட்டதே. ஏனெனில் ஒருசெயல் நிகழுமானால் அதனை நிகழ்த்துவிப்போன் ஒருவன் வேண்டும் என்பது முறையாகலின். இதனை, "அவை மூவினைமையின் தோற்றிய திதியே" என்று கூறினார். இங்ஙனம் உலகம் படைக்கப்படுகிறது எனில், அது எங்கிருந்து யாரால் படைக்கப்படுகிறது எனும் வினா எழுவது இயல்பு. இவ்வுலகம் முன்பு எங்கு ஒடுங்கியதோ அங்கிருந்துதான் மீளவும் படைக்கப் படுகிறது - அதாவது ஒடுங்கிய இடத்தினின்று உற்பத்தி உண்டா கிறது என்று கூறினர். இங்ஙனம் செய்வோன் 'ஒடுங்கி' எனப்

பெறுவான் என்றார் ஆசிரியர். இங்ஙனம் உற்பத்தியாவதும் அழிவதும் மீளவும் உற்பத்தியாவதும் ஏன்? எனில் உயிர்களிடத்துள்ள மூலமலம் - அதாவது ஆணவம் அடங்கும் பொருட்டே என்னும் கருத்தில் 'மலத்து உளதாம்' என்று குறித்தார். இவ்வளவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் இதனைச் செய்வோன் யார்? எனில் எவன் ஒருவன் இந்த அழித்தலைச் செய்கிறானே அவனே ஆக்கத்தையும் செய்கிறான்; எனவே அவனே கடவுள் என்பாராக, "அந்தம் ஆதி" என்றார். இது, வழக்கமாகக் கூறப் பட்டுவரும் கருத்தே என்று கூறுபவராக, 'என்மனார் புலவர் என்றெடுத்து மொழிந்தார். இனி நூற்பாவைக் காண்போம்.

" அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர் "

என்பது அது. இந்நூற்பாவின் கருத்தினைப் போதம் பின்னே மூன்று அதிகரணத்தில் ஆறுவெண்பாக்களில் விளக்கிக் கூறுகிறது.

சிவஞானசித்தியார் :

இப்படி உண்மையினை, முதல்நூலினை வழியொட்டியே அருள் நந்தி சிவாசாரியரும் கூறியுள்ளார். பின்னேன் வேண்டும் விகற்பம் கூறுதல் என்னும் மரபுப்படி தெளிவுபடுத்த வேண்டிய இடங்களில் தெளிவுறுத்தியுள்ளார். போதத்தில,

" அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் — "

என்று உள்ளது. இதில், "மூவினைமை" என்னும் தொகைச்சொல் லுக்கு விளக்கம் இல்லை. வழிநூல் ஆசிரியர் இதற்கு விளக்கம் தருகின்றார்.

" ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் "

என்று செய்யுளில் கூறியுள்ளார். இச்செய்யுளில்உள்ள, இவவுலகம், வந்து, நின்று, போவது என்பதுவே முதல் நூலில் "மூவினை" என்று குறிக்கப்பட்டது. மேலும், வந்து, நின்று, போவது என்னும் விளக்கம் மட்டுமன்றி எப்படிவரும்? எப்படிநிற்கும், எப்படிப்போகும்

என்னும் கேள்விக்கும் விளக்கம் கூறுவாராக, வரும்முறையில் வந்து; நிற்கும் முறையில் நின்று; செல்லும் முறையில் சென்று என்னும் பொருளில் "வருமுறை" என்னும் சொற்களைக் கூட்டிப் பொருள்காணும்படி கூறியுள்ள ஆசிரியரின் திறன் எண்ணற்குரியது. எல்லாம் முறைப்படி - நம்மால் மாற்ற முடியாதபடி நிகழ்கிறது என்பது இதற்குப் பொருள். வழிநூல் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இவ்விடம் சரியான எடுத்துக்காட்டு ஆகும்.

சித்தியார் ஆசிரியர், இங்ஙனம் உலகம் வந்து நின்று போவது ஏன்? என்பதற்கு ''மலத்துளதாம்'' என்று மெய்கண்டார் கூறியது போன்று, இங்கு விளக்கம் தரவில்லை; பின்னே கூறுகிறார். அடுத்து, இறைவனின் இலக்கணம் என்னஎன்னும் கேள்விக்குரிய விடையை விரிவாகக் கூறியுள்ளார் அவ்விறைவன், தனக்கு முதலும் ஈறும் இல்லாதவனாகித் தான் எல்லாவற்றிற்கும் முதலாகவும் ஈறாகவும் நின்று அருளுவான் என்றும் அங்ஙனம் அருளும்பொழுது இயல்பாகவே பாசத்தை நீங்கிய ஞானமாகிய சக்தி வடிவத்தினைப் பொருந்தி நின்று இவ்வுலகத்தைச் செயற்படுத்தும் தன்மையுடையன் என்றும் கூறியுள்ளார். இக்கருத்துக்களை,

> '' ... ... தான்முதல் ஈறுமாகி
> மருவிடும் அநாதிமுத்த சித்துரு மன்னிநின்றே''

என்னும் செய்யுள் பகுதி விளக்குகிறது.

எனவே போதத்தின் முதல்நூற்பாவும் சித்தியின் முதல் நூற்பாவும் ஒரு கருத்தை - பதி உண்மையைக் கூறுவதாக அமைந்திருப்பினும் ஒன்றில் ஒரு செய்தி அதிகமாகவும் மற்றொன்றில் பிறிதொரு கருத்து அதிகமாகவும் உள்ளமையை உணர்தல் வேண்டும்.

சிவஞானசித்தியார், இந்நூற்பாவை ஒட்டிப் பதி உண்மையினைப் பின்னே 69 பாடல்களில் விரிவாகக் கூறுகிறது.

(தொடரும்)

தருமையம்பதியும் தவமுனிவர் குமரகுருபரரும்

நெல்லை சிவமணி,

புலவர் திரு. ம. சிவசம்பு, எம். ஏ.,

பாளையங்கோட்டை.

செந்நெலும் கன்னலும் சேரும் மெய்த்தருமை நன்னகர், சிவமணம் கமழும் சிவராஜதானியாகத் திகழ்கிறது. இத்தலத்தில் இருக்கும் திருமடம்தான் தருமையாதீனம். இது மயிலாடுதுறையில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்நன்னகரைச் சூயிலாரும் பொழில் தருமை என்றும் நற்கோ நிரைகள்வாழ் தருமை என்றும் புலியும் பசுவும் நட்பொடு வாவி புகுத்து நீருண்டு ஒரே பொழிலில் விளையாடிக் கொண்டிருக்கும் தருமை என்றும் அறிஞர் பலரும் பாராட்டுவர்.

இத்தருமையாதீனத்தின் நான்காவது குருமூர்த்தியாகிய மாசிலாமணி தேசிகரிடம் செந்தில் ஆண்டவன் அருள்பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஞானதீக்கை பெற்றூர்கள். ஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் எல்லையற்ற குருபக்தியின் விளைவாகவும் இத்தருமையாதீனத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாகவும் தோன்றிய அருமை நூலே பண்டாரா மும்மணிக்கோவை. அதில் கூறப்பட்ட தருமையின் பெருமையை இக்கட்டுரையில் காண்போம்.

நீர்வளமும் நிலவளமும் :

இத்தருமை மருதநிலப்பகுதியாகும். காவிரியின் தென்கரையில் அமைந்தது. நாற்புறமும் மருதத்தண்பணை சூழ்ந்து நீர்வளம் நிறைந்தது. நீர் நிலைகளில் நீரரமகளிர் நீர்விளையாட்டு அயர் கின்றனர்.

> " நீரரமகளிர் பேரெழில் காட்ட
> மருதம் வீற்றிருந்து பெருவளம் சுரக்கும்
> தருமையம் பதி "

என்று நிலவளத்தைப் பாராட்டுகிறார் ஸ்ரீ குமரகுருபரர். அம் மகளிர் நீராட்டயரும் அழகை,

> " மைவழி சேப்பச் செவ்வாய் விளர்ப்பக்
> கரும் குழல் சரிய வெள்வளை கலிப்பச்
> சீராட்டயரும் நீராட்டு "

என்று புகழ்ந்து கூறுகிறார்.

பரிகலசேட அருமையும் பெருமையும் :

ஸ்ரீ குமரகுருபரர் பெருமைகளை எவராலும் அளவிட்டுச் சொல்லுதல் இயலாது; அவர் மூன்று காலங்களையும் உணர்ந்த மாமுனிவர். அவர் தம் குருநாதரிடம், "ஒருநாயாக - அதிலும் தின்னடித் தொண்டர், திருஅமுது ஆர்ந்து தெருக்கடை யெறிந்த பரிகலம் மாந்தி இப்பவக்கடல் உழக்கும் வரனுடை ஞமலியாகப் பிறக்கவேண்டும்" - என்றுவேண்டுகின்ருர். 'நாய்' என்றுசொல்லக் கேட்டதும் நமது உள்ளம் எல்லாம் நடுங்கிற்று. ஆனல் அவர் திருஉள்ளத்தில் பிறவியின் இழிவும், பிறவாமையின் உயர்வும், சிவபக்தியும் அடியார் பக்தியும் இவ்விரண்டும் இல்லாத மானிடப் பிறவியின் கீழ்மையும், நன்றி உணர்வும், தலைவனைப் பேணிக் காக்கும் அருமையும் உடைய நாய்ப் பிறவியின் மேன்மையும் எந்த அளவில் இருந்தன என்பதை நம்மால் உணர முடியவில்லை. நன்றி கெட்ட மனிதனைவிட நன்றியுள்ள நாய் மேலானது என்பது அவரது திருஉள்ளம்.

"பரிகலம்" என்னும் பெயர் இன்னும் திருமடத்தில் வழங்கும் மரபாக இருக்கிறது. குருமூர்த்திகளுக்கு திருஅமுது தயாரிக்கும் திருமடைப்பள்ளிக்குப் பரிகலம் என்ற மரபுச்சொல் பயன்படுத்தப் படுகிறது. ஸ்ரீ குமரகுருபரர் பரிகலம் என்று குறிப்பிடுவது. பரிகலச் சேடத்தை - குரு உண்டு எஞ்சிய சேடத்தை. இது கன்மப் பிணியும்சன்மப்பிணியும்போக்கும்,நோய்தீர்க்கும்அருமையுடையது. குருஅருளால் எல்லா நலன்களையும் தரவல்லது. இப்பொழுது மந்திர காஷாயம் கொடுக்கும் பொழுது திருக்கூட்டத்து அடியவர்க்குப் பரிகலசேடம் கொடுக்கும் மரபு இருக்கிறது. இப்பரிகலசேடத்தின் அருமையையும் பெருமையும் இத்திருமடத்தின் எட்டாவது குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பலம்பல தேசிகர் காலத்திலும் பன்னிரண்டாவது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிகர் காலத்திலும் அறிய முடிகிறது. இதனல் அன்றே முக்காலம்உணர்ந்த முனிவர் ஸ்ரீ குமரகுருபரர் தொண்டர் திருஅமுது ஆர்ந்து தெருக்கடை எறிந்த பரிகாலம் மாத்தும் ஞமலியாகப் பிறக்கவேண்டும் என்று வேண்டியிருக்கிருர்,

பரிகலசேடத்தின் பெருமை :

எட்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ அழகிய சிற்றம்பலதேசிகர் தக்ஷிணயாத்திரையாகக் கற்குளமாநகரில் எழுந்தருளிய காலத்தில் இவர்கள் அருள் திறத்தைச் சோதிக்க விரும்பிய சிலர் மலடியான ஓர் பேரிளம் பெண்ணை ஞானதேசிகரிடம் அனுப்பி, பிள்ளைப்பேறு வேண்டுமாறு விண்ணப்பிக்கச் செய்தனர்.

அப்பெண் பக்தி வரலாற்றை ஞானத்தால் உணர்ந்த குருமூர்த்திகள் "நீ விரும்பியவாறே ஆகுக" என ஆசிர்வதித்துப் பரிகலசேடத்தை அளித்தருளினர்கள். பரிகலசேடம் உண்ட மகிமையால் ஓர் ஆண் மகவைப் பெற்ற அவ்அம்மையார் அக் குழந்தைக்கு அழகிய சிற்றம்பலப் பரிகலம் எனப் பெயரிட்டு அழைத்து வந்து ஞானதேசிகரை வணங்கினர்.

பரிகலசேடத்தின் அருமை :

பன்னிரண்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர் யாத்திரையாகச் சென்று காளையார் கோவிலில் தங்கி இருந்தார்கள். அப்பொழுது அருணகிரி முதலியார் என்பவரும் அவர் மனைவியார் சிவகாமியம்மையாரும் நெடுங்காலம் மகப்பேறு இன்றி வருந்துவதை ஞானதேசிகரிடம் விண்ணப்பித்தனர். அவர்கள் வந்தநேரம் மாலைக்காலம். குருமூர்த்திகள் பரிகலச்சேடம் அளித்தருள விரும்பினர். மாலைநேரத்தில் பரிகலச்சேடம் எவ்வாறு கிடைக்கும்? பரிகலச்சேட அருமையை உணர்ந்த தயசுப்பிள்ளை மடைப்பள்ளியில்சிதறிக்கிடந்த அன்னத்தைப்பொறுக்கிவர, அதைக் கொடுத்துத் திருவருள்பாலித்தனர். பரிகலச்சேடம் உண்ட நற்றவத் தால் பிள்ளை இல்லாது வருந்திய அத்தம்பதியினர் ஓர் ஆண் மகவைப் பெற்றனர். அத்தம்பதிகள் அக்குழந்தைக்கு முத்துக் குமார பரிகலம் எனப்பெயரிட்டுத் தருமையம் பதிக்குவந்து சொக்க நாதருக்கு மகாபிஷேகமும், மாகேசுவர பூசையும் செய்து தம் ஊர் திரும்பினர்.

இவ்வரலாறுகளைப் படிக்கும் பொழுது பரிகலச் சேடத்தின் பெருமையையும் அருமையையும் அறிந்துதான் முக்காலமும் உணர்ந்த ஸ்ரீ குமரகுருபரர்,

" பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்திப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாதி நின்
அருளையும் அயரா தவதரிப் பதுவே "

என்று வேண்டினர் என்று எண்ணி மகிழ்வோம்.

முடிவுரை :

கமலை ஞானப்பிரகாசரின் மெய்த்தொண்டர்கள் பதி பசு பாசத் தின் உண்மையை ஆய்ந்தறிந்து, பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாம் காய்வார்; கல்வி கேள்வி அல்லல் ஒய்வார், சிவானந்தவாரியுள்ளே

ஒன்றும் இரண்டும் அறத்தோய்வார்என்பதையும் ஸ்ரீலஸ்ரீ மாசிலா மணி தேசிகரை ஸ்ரீ குமரகுருபரர் சந்தித்தபோது பெரியபுராணப் பகுதியில் சுந்தரமூர்த்திசுவாமிகள் தில்லை நடராஜப்பெருமானைத் தரிசித்த திறத்தைக் கூறும் "ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள" என்ற அருமைப் பாடலுக்குத் தருமையம்பதியில் விளக்க உரையும் அனுபவ உரையும் நடந்துகொண்டிருந்தது என்பதையும் அத்தருணத்தில்தான் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு ஞான உபதேசம் நடந்தது என்பதையும் அறிகிறோம்.

அன்றுநடந்த அதேகாட்சியை இன்றும் தருமையில்காணலாம். தருமையம்பதியில் குருமூர்த்தியாக எழுந்தருளியுள்ள 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் அமைத்து அதன் வழி, தருமையம்பதியில் திருமடத்தின் ஆகமக்கட்டில் தோத்திர சாத்திர ஒப்பாய்வுக் கருத்தரங்கு இப்பொழுதும் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அன்றுதொடங்கிய அத்திருப்பணி தைல தாரையாக இன்றுவரை நடந்துகொண்டிருக்கிற அருள் ஓட்டத்தை நம்மால் காணமுடிகிறது.

செந்நெலும் கன்னலும் சேருமெய்த்தருமை
நன்னகர் வருசிவ ஞானதேசிகன்
பொன்னடி இணைமலர் போற்றுதும்
மன்னு பேரின்ப வாழ்வு பெறற்பொருட்டே.

என்ற பழைய பாடலை நினைவுகூர்ந்து முடிக்கிறேன்.

கடிதம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு, வணக்கம். 3—7—88 காலை தங்களின் அருளுப தேசம் கேட்கும் பேறுபெற்றேன்.

சூரியகிரணங்கள் நம்மீது நேரடியாகப் படுவதில்லை. இடையில் மேகத் திரள்களின்மீது பட்டுத்தான் நம்மீது பிரதிபலிக்கிறது. ஆறு மரங்களின் பிராணவாயு அன்றாடம் நமக்குத் தேவை. ஓசோன், மரங்களின் மூலம்தான் கிடைக்கிறது. விடியற் காலை 4-00 — 6-00 இது சற்று அதிகமாகக் கிடைக்கிறது. இது போன்ற அறிவியற் செய்திகளைப் புதிதாகக் கேட்டறிய முடிந்தது. அந்தணர் என்பவர் பிற உயிர்களைக் கண்டு இரக்கம் கொள்பவர்களாவர் என்பதும் அருமையான விளக்கம். நன்றியுடையேன்.

மேலப்பாதி,
6—7—88.

சு. பாலகிருஷ்ணன்,
செயலர், திரு. வி. க. நூல் நிலையம்.

தருமைஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக நினைவு,
சைவசித்தாந்த மாலை நேரக் கல்லூரி
சைவசித்தாந்த இளப்புலவர் சான்றிதழ் வழங்கும் விழா

சான்றிதழ் வழங்கிய தஞ்சை மாவட்ட நீதிபதி.
திரு. இராஜகோபால் பி. எஸ்சி., பி. எல். அவர்களுடன்
சான்றிதழ் பெற்ற(மயிலாடுதுறை மையம்) 'சைவசித்தாந்தப் புலவர்' வகுப்பு
மாணக்கர்கள். 1—7—88.

சேத்துப் பிறவாதார்

திருமுறைக் கலைஞர்
புலவர் ச. சுந்தரேசம் பிள்ளை
சிதம்பரம்.

அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி ஓதிவருவார் — தினம்
ஆண்டவனின் அருட்செயலைக் கூறிவருவார்
தஞ்சமென்றே கோயில்களைச் சுற்றிவருவார் — மலர்
தவரும விட்டுகழல் பக்திபுரிவார்

உயிர்களுக்கு அன்புதவித் தொண்டுபுரிவார் — தம்
முறவு நட்பு பகையின்றிக் கண்டு தெளிவார்
மயிர் விழுந்தால் மதிப்பில்லை என்று இகழ்வார் — தன்
மானமொன்றே பெரியதென மதித்துமகிழ்வார்

தொழுநோய்கள் சிறுநோய்கள் துடைக்கும் மருந்தாய்ப்— [பசு
தூயவெண்ணீ றணிந்துமனத் தூய்மை பெறுவார்
பழுதில்லா இல்லறத்தின் பாதை செல்லுவார்—இந்தப்
பாரில் சேத்துப் பிறவாதார் பாதை செல்லுவார்.

சிறப்புலி நாயனர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 3—7—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

ஒவ்வொரு முதல் ஞாயிறும் அன்பர்களுக்குப் புத்தறிவு நல்கும் புனிதநாள்! அன்பர்கள் திருமடத்தின் ஆகமக்கட்டில் அமர்ந்திருந் தார்கள். சரியாக மணி பத்துக்கு அருளுபதேசம் தொடங்கும் ஆவலோடு காத்திருந்த அன்பர்கள் உரியநேரத்தில் - ஆதீனப் பண்டாரக்கட்டிற்குச் சென்றனர்.

திருமுறைப் பாராயணம் நிறைந்து திருநீற்றுப் பொலிவழகும் திருமேனிச் சீரழகும்தாங்கி, ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சித்திராசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அன்பர்கள், வணங்கி நீறுபெற்று அமர்ந் தனர். திருமுறைப் பண்ணிசையுடன் அருளுபதேசக் கூட்டம் தொடங்கிற்று.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் முதலில் மாதச் சிறப்புத் திருநாள்கள் பற்றிய சில விளக்கங்களை வழக்கம் போல் அருளிச் செய்தார்கள். அடுத்துத் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக - சிறப்புலி நாயனர் புராண உபதேசம் செய்தார்கள்.

" சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலி "

என்று நம்பியாரூரர் சிறப்புலியாரைக் குறிப்பிட்டார். நம்பி யாண்டார் நம்பிகள்,

" புவனியில் பூதியும் சாதனமும் பொலிவார்ந்து வந்த
தவநியமர்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணன் "

என்று சிறப்புலியார் அடியார்க்கு உதவும் அருளிப் பாட்டினைக் குறித்தார்.

சிறப்புலி நாயனர் திருஆக்கூரில் தோன்றியவர் என்பதைக் குறிப்பிட்டுக் கூறும்போது, ஆக்கூர்ச் சிறப்பாகச் சேக்கிழார்,

" பொன்னி நீர்நாட்டில் நீடும்பொற்பதி புவனத்துள்ளோர்
இன்மையால் இரந்து சென்ருர்க்கு இல்லை என்னுதேஈயும்
தன்மையார் என்று நன்மை சார்ந்த வேதியரைச் சண்பை
மன்னனர் அருளிச்செய்த மறைத்திரு வாக்கூர் அவ்வூர் "

எனப் போற்றிப் பாடித் தொடங்கினர். குருமணிகள் இப்பகுதியை மிக அற்புதமாக ஆய்வு நோக்கோடு புலப்படுத்தினர்கள். "சேக்கிழார் அருளிய பெரியபுராணம் தேவாரத் திருமுறைகளின் திறவுகோல்" என அருளி இப்பாடல் கொண்டு விளக்கம் வழங்கியமை சிந்திக்கவைத்தது.

திருஆக்கூர் புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க தலம். இத்தலத்து மாடக்கோயில் கோச்செங்கட்சோழன் எண் தோள் ஈசற்கு அமைத்த எழுபது மாடக்கோயில்களுள் ஒன்று, இத்திருக்கோயிலில் தான்தோன்றியப்பர் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அருளிய தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்றது இத்தலம். திருஞான சம்பந்தர் தேவாரத்தில், "இத்தலத்தில் வேளாளர்களும் அந்தணர்களும் வள்ளன்மை மிக்கவர்களாக இருந்தார்கள்" என்பதைப் புலப்படுத்திப் பாடியுள்ளார்.

" வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே "

என்ற அடிகளில் வேளாளர் வள்ளன்மையைத் தெளிவாகக் குறித்துக் காட்டினர் ஞானசம்பந்தர். அதே பதிகத்தில்,

" இன்மையால் சென்று இரந்தார்க்கு
இல்லை என்னாது ஈந்து உவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே "

என்றும் குறிக்கின்றார். இது அந்தணர் வள்ளன்மையைக் குறிப்பது ஆகும். ஞானசம்பந்தர் தேவாரப் பாடலில் அந்தணர் எனக் குறிப்பதற்குத் தெளிவான ஆதாரம் இல்லையே! பின்னர் எப்படி ஈந்துவக்கும் தன்மையார் அந்தணர் எனக்கொள்வது? சேக்கிழார் தான் திறவு கோலாக அமைகிறார்! அவர்பாடல்தான் நமக்கு இப்பாடலின் உரைகாண வழிவகுக்கிறது.

" புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க்கு இல்லை என்னாதே ஈயும்
தன்மையார் "

எனத் தொடங்கி,

" நன்மை சார்ந்த வேதியரை "

எனத் தெளிவாகக் குறிக்கிறார் சேக்கிழார். யார் இப்படிச் சொன்னது? சேக்கிழார் மேலும் விடைதருகிறார்.

" சண்பை மன்னனார் அருளிச் செய்த
மறைத் திருவாக்கு "

இது என்கிறார்.

ஆம்! குருமணிகள் துல்லியமான ஒருவிளக்கத்தை ஆய்வு நோக்கோடு அனைவரும் உணர விளக்கியருளினார்கள். மேலும் சேக்கிழார் அருளிய இப்பாடலின் நிறைவுப் பகுதியையும் விளக்கினார்கள். "ஞானசம்பந்தர் திருவாக்கினை உடைய ஊர்–திருவாக்கு ஊர் – அவ்வூர்" என்னும் பொருள்படத் "திருவாக்கூர் – அவ்வூர்" என்றார் சேக்கிழார். "திருவாக்கூர் – ஆக்கூர்" என்று பாட பேதம் உண்டு. "தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவாரூர் திருவாரூர்" என்பது போன்ற அமைப்புடையது இப்பாட பேதம் எனக்குறித்துக் காட்டியமை சீரிய ஒப்பீடாக அமைந்தது.

சிறப்புலி நாயனார், அந்தணர் மரபினர். வள்ளன்மை மிக்கவர். சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் " சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலி " எனக் குறித்தமைக்கு இயைய " வள்ளல் " என்றே சேக்கிழாரும் இவரைக் குறித்துக்காட்டுகிறார். "ஈகையில் சிறந்த நீரார்" என்றும் "மறைப் பெரு வள்ளலார் வண்சிறப்புலியார்" என்றும் அருளிச்செய்துள்ளார்.

சிறப்புலியார் அடியார்களிடம் அன்பு கொண்டவர்; அவர்களிடம் இனியனகூறி அமுது செய்விப்பவர். அவர்கள் நயந்தன வற்றை நல்குபவர். அஞ்செழுத்து ஓதி, வேள்வி செய்பவர். வேள்வி எல்லாம் சிவபெருமான் திருவடிகளை நண்ணும் வகை செய்பவர் என்று சிறப்புலியாரின் பெருமைகளை எடுத்தோதியமையைக் குறிப்பிட்டு வேள்விகள் சிவன்பொருட்டாக - சிவார்ப்பணமாகச் செய்யவேண்டுவதன் இன்றியமையாமையையும் புலப்படுத்தினார்கள்.

அன்றைய அருளுபதேசம் சீரிய ஆய்வுரையாக, பக்திசுவை சொட்டுவதாக - பண்பாடு வளர்ப்பதாக அமைந்தது; சிறந்தது; நிறைந்தது.

இன்சுவைக் கனிச்சாறு பருகினோம்! சிறப்புலியார், ஞான சம்பந்தர், சேக்கிழார் – இவர்கள் பெருமைகளை மனங்கொள உணர்வித்த குருமணிகள் நினைவோடு இல்லம் ஏகினோம்.

சீர்திகழும் வள்ளல்புகழ் செகமுணர உரைசெய்த
பார்புகழும் குருமணியின் பதமலர்கள் தொழுதிடுவோம்!

வாழ்க குருமணிகள்!

உ

குருபாதம்

சச்சிதானந்தப் பிள்ளையார் கோயில் கல்வெட்டு

வித்துவான் திரு. தா. குருசாமி

மதுரை.

முன்னுரை :

தருமபுர ஆதீனம் வடக்குக் குருமூர்த்த வளாக முகப்பில் உள்ள சச்சிதானந்தப் பிள்ளையார் கோயில் உள்பகுதியின் மேல் தளத்தில் கீழ்க்கண்டவாறு நான்கு வரிகளில் வெட்டப்பட்டுள்ளது; அவை அப்படியே படி எடுத்தபடி தரப்படுகிறது.

கல்வெட்டு :

1. உ. கலியுக வருஷம் சதகஎயஎ ல் சகாத்தம் தஎஎங்ய அ க்குமேற் செல்லா
2. நின்ற தாது வருஷம் வைகாசி மீ க உ காசி தருமங் குமரகுருபர தம்பிரான் சச்சிதான
3. ந்தப் பிள்ளையார் கோவில் கருங்கல்லாலெ கட்டிவைக்கிர தென அபிமுத்திச்சுக் கொண்ட
4. படிக்கி அந்த உத்திரவுப் படிக்கி சடையப்பத் தம்பிரான் கட்டிவைச்சது நித்தஞ்சதா சேர்வை.

விளக்கம் :

கல்வெட்டு, பிள்ளையார் சுழியோடு தொடங்குகிறது. சாலி வாகனசகாப்தம் ஆண்டைக் கணக்கிட்டுப் பார்த்தால் 172 ஆண்டு கள் மொத்தமாகிறது. ஏறக்குறைய கி. பி. 1816 இல் இப்பிள்ளையார்

கோயில் கட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீ காசிமடத்து ஸ்ரீ குமரகுருபரத் தம்பிரான் தமது குருநாதர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகரின் குருநாதரான ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் குருமூர்த்தம் அமைந்துள்ள வளாகத்தில்சச்சிதானந்தப் பிள்ளையார் கோயில் விதிப்படிக் கட்டுவதாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களிடம் உறுதி கூறியபடி, அவர்கட்குப் பின்பு ஸ்ரீகாசிமடம் பொறுப்பையேற்ற ஸ்ரீ சடையப்பத் தம்பிரான் நிறைவுசெய்து முடித்திருப்பதாக அறியக்கிடக்கிறது. நித்தஞ்சதா சேர்வை - சதாசிவசிந்தனை மறவாமை என்பதாம்.

வரலாற்றுக் குறிப்பு :

ஸ்ரீ தில்லைநாயகத்தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீ காசிமடத்தைத் திருப்பனந்தாளில் கி. பி. 1720இல் அமைத்தார்கள். கி. பி. 1725 இல் குமரகுருபரத் தம்பிரான் சுவாமிகளால் காசியில் குருமடமும் கேதாரீஸ்வரர் ஆலயமும் கட்டப்பட்டன. அவர்கட்குப் பின்புவந்த அருணாசலத்தம்பிரான் சுவாமிகளால் பலரிடம் வசூல் செய்து கேதாரக் கட்டம் படிகள் கட்டப்பட்டன. (வைத்தீசுவரன் கோயில் கும்பாபிஷேகமலர்-1970: பக்கம்-359) ஆதீன இலட்சுமிக் கட்டில் ஸ்ரீ சடையப்பத் தம்பிரான் திருவுருவம் உள்ளது.

ஸ்ரீ காசிமடத்தை அலங்கரித்த தில்லைநாயகத்தம்பிரான், குமரகுருபரத் தம்பிரான் என்ற குமாரசுவாமித் தம்பிரான், அருணாசலத்தம்பிரான் - மூவரும் திருப்பணியில் தலைசிறந்து விளங்கியவர்கள். ஸ்ரீ குமரகுருபரத்தம்பிரான் சுவாமிகள் எடுத்துக் கொண்ட உறுதி மொழிப்படி, பின்வந்த ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் அவ்வுறுதி மொழியைச் செயல்படுத்திக் குருவருள் பெற்றிருக்கிறார்கள். காலம் கி. பி. 1810 - 1827 - என்பது ஸ்ரீ காசிமட வரலாற்றுக் குறிப்பாகும்.

ஸ்ரீ சடையப்பத்தம்பிரான் சிறப்பு:

ஸ்ரீ சடையப்பத்தம்பிரான் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் இருந்து ஆட்சிசெய்து கொண்டிருந்தபோது, தஞ்சை இரண்டாம் சரபோஜி மன்னன் அவர்களையும் அழைத்துக்கொண்டு, பரிவாரங்கள் புடைசூழக் காசி யாத்திரை மேற்கொண்டான். மன்னனின்

செலவுக்குப் பணம் போதாமையால் ஸ்ரீ குமாரசாமி மடத்திலிருந்து கடனுதவி அளிக்கப்பட்டது. மன்னன் ஸ்ரீ காசிவாசி சடையப்பத் தம்பிரான் சுவாமிகளுக்கு 'ராஜரிஷி' என்ற பட்டம் வழங்கினன்.

குருபக்தி:

வடக்குக்குருமூர்த்தப்பிள்ளையார் கோயிலைக்கட்ட எண்ணியவர்கள் ஸ்ரீ குமரகுருபரத் தம்பிரான் அவர்கள் கட்டிடக் கலைப்பிரியர். அவர்கட்குப் பின்பு வந்த ஸ்ரீ சடையப்பத் தம்பிரான் குருபக்தி மிக்கவர்கள். தமது முன்னேர் சங்கற்பித்துக் கொண்ட செயலைச் செய்து முடிப்பதிலேயே திருவுளங்கொண்டவர்கள். குமரகுருபரத் தம்பிரானும், அருணுசலத்தம்பிரானும் காசியிலேயே தங்கி, திருப்பணி தருமங்களை நெடுங்காலம் கவனிக்க வேண்டியதாயிற்று. அதனுலேயே 'காசி தருமங் குமரகுருபரத்தம்பிரான்' என்று கல் வெட்டுஅழைக்கலாயிற்று. வடக்குக் குருமூர்த்த சச்சிதானந்தப் பிள்ளையார் கோயிலைத் திருப்பணி செய்ய எண்ணியவர்கள் அப்பொழுது எழுந்தருளியிருந்த 12வது பட்டம் ஸ்ரீ முத்துக்குமார தேசிகரிடம் விண்ணப்பித்துக் கொண்டபடி, அவர்கட்குப்பின்பு வந்த ஸ்ரீ சடையப்பத்தம்பிரான் சுவாமிகள் கட்டி முடித்துக் குருவருள் பெற்றிருக்கிருர்கள்.

முடிவுரை:

ஸ்ரீ சடையப்பத்தம்பிரான் சுவாமிகள் காசியிலிருந்து தமது குருநாதருக்கு எழுதிய கடிதத்தில, "காசியில் நடைபெறும் அறச் செயல்கள் எல்லாம சடையப்பன திருவருளாலும், ம் குருவருளாலும் எளிதில் நடத்திவிட முடியும்" என்று எழுதியிருப்பதாக, தருமை ஆதீனக் குருபரம்பரை வரலாறு கிளர்ந்து ஓதுகிறது. இவர்களின் குருபக்தியை விளக்குமட கோயிலே ஸ்ரீ சச்சிதானந்தப் பிள்ளையார்கோயில். வழிபட்டு உய்வோமாக.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு விபவ ஆனி ௫ ஆம் நாள் 19—6—88 ஞாயிறன்று மயிலாடுதுறை மங்கைநல்லூரை அடுத்துள்ள வைப்புத்தலமாகிய பெரம்பூர் என வழங்கும் பிரம்பில் தலத்தில் நடைபெற்றது. இத்தலம் சிறந்த சிவதலமாகவும் முருகத் தலமாகவும் விளங்குவது. அப்பர் திருத்தாண்டகத்தில் குறிக்கப் பெற்றுள்ள இத்தலத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆயில்யவிழா சிறப்பாகநடைபெற்றது. 'பெரம்பூர் என வழங்கும் பிரம்பில் தலச்சிறப்பும் தேவாரமும்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., தலப்பெருமைகளை விளக்கி உரையாற்றினர். அன்பர்கள் விழாவிற் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. 84 ஆம் அருளுபதேசம் 5—6—88 அன்று ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் குருபூஜைத் திருநாளாக அமைந்தது; ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளிய நூல்கள் பற்றிப் புலவர்கள் உரையாற்றினர். 85 ஆம் அருளுபதேசம் 3—7—88 அன்று ஆதீனப் பண்டாரக்கட்டில் திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவ சித்தாந்தச் செந்நெறி விளக்கம் செய்தருளினர்கள். இம்மாதம் சிறப்புலி நாயனர் புராண உபதேசம் செய்தார்கள். சேக்கிழார் அருளிய பெரியபுராணம், தேவாரத் திருமுறைகளுக்குத் திறவுகோலாக அமைந்து சிறப்பது என்னும் ஆய்வைப் புலப்படுத்திச் சிறப்புலி நாயனர் புராண முதற்பாடல் கொண்டு நிறுவியருளினர்கள். வேள்விச் சிறப்பு, ஐந்தெழுத்தின் பெருமை முதலியனவற்றைப் புராணம் கொண்டு மனங்கொள உணர்த்தியருளினர்கள்.

ஆதீன அடியவர்களும், அன்பர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் அருளுபதேசம் கேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்தும் பயன்பெற்றனர். அடுத்து 86 ஆம் அருளுபதேசம் 7—8—88 அன்று நிகழும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா 19—6—88 ஆனிமக நாளன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. சமயாசாரியர், சந்தானாசாரியர்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். மாலை 6-30 மணியளவில் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் புலவர் திரு. கே. கணபதி, பி. லிட்., பி. எட்., மாணிக்கவாசகர் அருள் வரலாறு பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., மாணிக்கவாசகர் அருள்நூல்கள் பற்றியும் உரையாற்றினர். இரவு 8-00 மணியளவில் ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவீதியுலா நடைபெற்றது.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில், ஸ்ரீ சமயாசாரியர், சந்தானாசாரியர் திருக்கோயில் சந்நிதியில் மாலை 7 மணியளவில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. திருமுறைக்கலாநிதி திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப் பண்ணிசை நிகழ்த்தினர். பிரம்மஸ்ரீ டாக்டர் திரு. ஐ. ஆனந்த நடராஜ தீட்சிதர் அவர்கள் தலைமையில் தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சிநிறுவனப் பதிவாளர், வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., மாணிக்கவாசகர் வரலாறும் அருள் நூல்களும் பற்றி உரை நிகழ்த்தினர். அன்பர்கள் வழிபட்டும், சொற்பொழிவினைக் கேட்டும் பயன் பெற்றனர்.

வேளூரில் சம்வத்சராபிஷேகம்

சிவாலயங்களில் குடமுழுக்கு நடைபெற்ற திருநாளை அடுத்து வரும் அதேநாளில் அபிஷேக ஆராதனைகளுடன் கொண்டாடுவதை சம்வத்சராபிஷேகம் என்பர். தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருக்கோயிலில் 2—7—69 சௌமிய - ஆனி - திருவோண நாளில் குடமுழுக்கு விழா நடைபெற்றதன் நினைவாக விபவ - ஆனி - திருவோண நாள் கூடிய 2—7—88 சனிக்கிழமையன்று சம்வத்சர அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், ருத்ரஜபம் முதலியவற்றுடன் அபிஷேக ஆராதனைகள் நடந்தன. அன்பர்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு

சைவசித்தாந்த மாலை நேரக்கல்லூரி

பட்டமளிப்பு விழாவும் சைவசித்தாந்தப் புலவர் வகுப்பு

தொடக்க விழாவும்

இக்கல்லூரியின் சென்னை மையத்தில் 1—7—88 வெள்ளிக் கிழமை மாலை உயர்திரு ச. மெய்கண்டதேவன் இ. ஆ. ப. அவர்கள் தலைமையில் விழா நிகழ்வுற்றது. உயர்திரு டாக்டர். சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பிஎச். டி., அவர்கள் சைவ சித்தாந்த புலவர் வகுப்பைத் தொடங்கி வைத்தார். பேராசிரியர்கள் அறிமுக உரையுடன் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

மதுரை மாவட்டத்தில் 1—7—88 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு டாக்டர் திரு. இ. இ. சூரியமூர்த்தி தலைமையில் விழா தொடங்கப் பெற்றது. புலவர் திரு. இ. கலியாணசுந்தரனார் வரவேற்புரை நல்கிட டாக்டர் கங்காதரன் அவர்கள் அறிக்கை வாசித்தார். தொடக்கவிழா பேராசிரியர் டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா அவர்களால் நிகழ்வுற்றது. சிவதர்மசீலர் டாக்டர் ஆர். எல் அனுமந்தன் பட்டமளித்து உரை நிகழ்த்தினர். டாக்டர் திரு. ஆனந்தராசன் அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம்முடிவுற்றது.

பாளையங்கோட்டை மையத்தில் 1—7—88 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்குசைவசபையில் திரு. ச. சைலப்பன், பி. இ. எம்.டெக் அவர்கள் தலைமையில்கூடியது. புலவர்திரு. ம. சிவசம்புவரவேற்புரை நல்கினர் திரு. வை. ஆறுமுகபபிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். திரு. பி. வேலப்பபிள்ளை எம். ஏ., அவர்கள் பட்ட மளிப்புப் பேருரை நிகழ்த்திச் சான்றுகள் வழங்கினர். திரு. சி. சு. மணியவர்கள் வகுப்புக்கள் தொடக்க விழா நிகழ்த்த நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

மயிலாடுதுறை மையத்தில் 1—7—88 மாலை 7 மணிக்கு மாவட்ட நீதிபதி உயர்திரு ஆர். இராஜகோபாலன், பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் தொடங்கிற்று அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன கௌரவ இயககுநர் திரு. டி, என். இராமச் சந்திரன, பி. காம். பி. எல்., அவர்கள வரவேற்புரை நல்கினர்.

நீதிபதி அவர்கள் பட்டமளிப்பு விழா நிகழ்த்திச் சான்றுகள் வழங்கியதோடு அறுவகைச்சமயம் - சுருக்கவிளக்கம் என்ற இளம்புலவர் பாடநூலினை வெளியீடு செய்து முதற்படியை இயக்குநரிடம் அளித்து உரை நிகழ்த்தினர். பேராசிரியர்கள் அறிமுக உரை நிகழ்த்தினர். பதிவாளர் திரு. சொ. முத்தையன் எம். ஏ., நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

காரைக்கால் மையத்தில் 9—7—88 சனிக்கிழமை காலை 10-30 மணிக்குக் காரைக்காலம்மையார் ஆலயத்தில் தொடங்கிற்று. ஓய்வுறு நீதிபதி திரு. அ. மு. ப. ந. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை நல்கினர். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளி ஆசியுரை வழங்கி வெற்றிபெற்ற பயிற்சியாளர்க்கு நள்ளாற்றுச் சனிபகவான் பிரசாதத்தோடு கனி ஒன்று வைத்துச் சான்றிதழ்கள் வழங்கினர்கள். தொடக்கவுரை பாண்டிச்சேரி விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. வி. கோவிந்தராசன் அவர்கள் நிகழ்த்தினர். பேராசிரியர் அறிமுக உரையுடன் புலவர் அ. இலக்குமணன் பி. லிட்., பி. எட்., நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

சிதம்பரம் மையத்தில் 10—7—88 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-05 மணிக்கு டாக்டர் இராம. முத்தையன் எம். காம்., பிஎச். டி., அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது. தலைவர் அவர்கள் பட்டமளிப்பு செய்து பேருரை நிகழ்த்தினர் அறப்பணிச் செல்வர் டாக்டர் சே. அரங்கசாமிப்பிள்ளை அவர்கள் சைவ சித்தாந்தப் புலவர் வகுப்பினைத் தொடங்கி வைத்தார்கள். பேராசிரியர்கள் டாக்டர் அ. சாமிஐயா, டாக்டர். கு. சுந்தரமூர்த்தி அறிமுக உரை நிகழ்த்தினர். த.ஆ. அ.சை.சி. ஆராய்ச்சி நிறுவனப் பதிவாளர் சொ. முத்தையன் எம். ஏ., அவர்கள் உரை நிகழ்த்தியபின் அமைப்பாளர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

திருச்சி மையத்தில் 1—7—88 வெள்ளிக்கிழமை மாலை 6-மணி அளவில் தொடங்கிற்று. பேராசிரியர் வீ. நாகராசன் எம். ஏ., பி.ஏ., எல்.. அவர்கள் வரவேற்புரை நல்கினர். முத்தமிழ்க்காவலர் முனைவர் கலைமாமணி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையேற்றார். பேராசிரியர் . சி. சண்முகசுந்தரம் அவர்கள் பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தி பட்டமளிப்பு செய்தார். மலைக்கோட்டை ஸ்ரீ மௌனமடம் கட்டளை மகாலிங்க சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினர்கள். மையப் பொறுப்பாளர் வித்துவான் திரு. மு. வைத்தியநாதன் நன்றிநவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹு ஆடிமீ 1உ முதல் 32உ முடிய)

(16—7—88 முதல் 16—8—88 முடிய)

விபவஹு ஆடிமீ 1௳ ஸ்திரவாரம் ஆயில்ய நக்ஷத்திரம் தைதுலை கரணம் கூடிய காலத்தில் சூரியன் உதயம்முதல் 13 நாழிகை 2 வினடிக்கு, கன்யா லக்னத்தில் ஸ்ரீலோக ரட்சகரான சூரியபகவான் உலக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மிதுன ராயிசி லிருந்து கடகராசிக்கு சங்கிரமணமாக ஆடிமாதப்பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று தக்ஷிணயன புண்ணியகாலம். ஸஸ்யாதிபதி சனீஸ்வரன் ஆகிருர். உலகில் மிதமழை, மிதப் பயிர் விளைவு, அகவிலை ஏற்றம்காணும். கரிசல் பூமியில் பயிர் செழிக்கும். எள், உளுந்து மற்றும் ஸஸ்யப்பயிர்கள் அதிகரித்துப் பலன்தரும். மற்றும் கிரகஸ்திதியினல் சர்வேசுவரனின் ரட்சகமாக தேசங்களில் எங்கும் ஆன்ருேர்களின் நன்மார்க்க உரைகளின்றும் யுத்த சமரசமும், வன்முறைகள் நீங்குவதுமாகி சம்ரக்ஷணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். கல்விச்சாலைகளில் மாணக்கர்களுக்குப் புதிய போதன முறை, கம்பியூட்டர் சாதனம் பயிற்சி வெகுவாகப் பரவும். மக்களுக்கு ஜீவனேபாயம் நன்மார்க்கத்தில் ஏற்படும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரியர்களாக வந்து பரம் பொருளைப் பூசிக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குரு மகான்கள் உலகத்திற்கு சிவாசாரம், சிவதத்துவார்த்தம் இயம்பியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். தேசங்களில் ஆங்காங்கு சிவாலயங்களில் சிவநேயபக்தர்களின் திருச்சபைக் கூடிக் கூட்டுப்பிரார்த்தனையில் பரமனின் அருள் விளைவிப்பார்கள்; மன அமைதியடைவார்கள். க்ஷேமமுறுவார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். வஸ்திரபூஷணம் தரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷ நற்பலனையளிக்கும். ஜூலை 20ஆம் ஆனால் அரசுச் செய்தி ஒன்று நன்மையாகி வரும். பூமி பிராப்தியில் இயந்திர சாதனங்களில் கணிசமாகப் பொருள் முடங்கச்செய்யும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பணவருமானம் வரும். இரத்தினபூஷணம் தரும். இயந்திரம் கம்பியூட்டர் சாதனம் அனுபோகம் தரும். ஆகஸ்டு 6 தேதியில் ஞானசிந்தனையில் அல்லது விஞ்ஞான நுட்ப ஆராய்ச்சியில் அதிகம் மனம் செல்லும். யாத்திரை செல்லுதல், தெய்வதரிசனம், பிரமுகர்கள்சந்திப்பு ஏற்படச்செய்யும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். ஸ்திரீவழியினர் முன்னேற்றத்தில் சாஸ்திரோக்த தெய்வ புண்ணிய கைங்கரியங் களில் நல்ல வகைச் செலவினை ஏற்கும். ஜூலை 20 தேதியில் அரசாங்கக் கடிதத்தொடர்பில் ஓர்நன்மை ஏற்பட்டுவரும். எல்லாக் காரியங்களும் பொது நலத்தில் கெடியாக நடந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 28, 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பணவருமானம் வரும். மாணிக்க மரகதக்கல் ஆபரணப் பிராப்தியளிக்கும். ஆகஸ்டு 5 தேதியில் புதுமை காணுதல், நல்ல பிரபலம் ஏற்படுதல் ஆகும். ஒரு விலையுயர்ந்த புதிய வாகனம் தரும். எல்லாவற்றிலும் சிறப்பு நிலையாக இருந்துவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜூலை 31 ஆகஸ்டு 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வந்துநிறையும். வித்தியா வியாபாராதிகளில் விளம்பரவிஷயங்

களில் பொருட் செலவாயினும் அபிவிருத்திகாணும். கால் சருக்குதல் போன்ற சிறு விபத்து வந்து தப்பும். காரியங்களில் தயக்கநிலை ஒருபுறம் இருப்பினும் தெய்வ பலனினால் பிடிபிடியெனப் பூர்த்தியடைதல் ஆகும். அரச கௌரவம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 2, 3, தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னி ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் ஜுலை 20 க்கு நல்லன ஏற்படும். எழுத்து மூலங்களில் அரசாங்க நன்மையை உண்டுபண்ணும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரர்களின் கல்வி, கலை, தொழில் துறைகளில் நல்ல ஸ்திதியை உண்டுபண்ணும். தாம்பத்தியவாழ்வில் பிணக்குவரினும் உடன் சுமுகத்துடன் நற்கன்மம் நடக்கும். நல்லோர், பிரபலஸ்தர் நன்மை செய்து வருவர். ஆகஸ்டு 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி -விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமானங்களில் நல்லஸ்திதியாக இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நல்ல பிரயோஜனம் உண்டுபண்ணும். ஜுலை 22 தேதி அளவில் அரசாங்கத்திலிருந்து பதவி உயர்வுக்கான உத்திரவு வரச்செய்யும். வழக்கு விவகாரங்களில் ஜெயம் தரும். எல்லாக்காரியங்களும் திடசித்தத்துடன் நேர்மையாக நடந்துகொண்டிருக்கும். ஜுலை 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் பெரும்திப்பில் வந்துகொண்டிருக்கும். வித்வத்துவம் கலைத்துறையில் ஜுலை 20 தேதியளவில் நற்பலனும் அனுகூல வாய்ப்புக்களும் ஏற்படும். சிறிய தந்தை அல்லது அத்தையின் சொத்து பிராப்தியளிக்கும். ஓர் இயந்திர வாகனம் தரும். நல்லோர் பிரபலஸ்தர்களின் நேசம் ஏற்படும். தெய்வதரிசனம், சாத்திரோக்த நற்கிரியைகள் செய்தல் ஆகும். தாம்பத்தியவாழ்க்கை தானதர்மத்துடன் நல்லவிதமாக நடந்து வரும். ஆகஸ்டு 8, 9, 10. தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். அதிகமான செலவினங்களும் இருந்துவரும். அன்புக்குரியவர் ஒருவர் மனஸ்தாபத்தில் இருந்துவருவர். வித்து வத்துவம் கலைத்துறையில் ஜூலை 20 தேதியளவில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். பூமி இயந்திரங்களில் விருத்தியின்மை காணும் சனிக்கிழமை சனீஸ்வரனுக்கு திலதீபம் ஏற்றுதல் நலம். தார் புத்திரர்களுக்கு நலம்தரும். ஜூலை 16, ஆகஸ்டு 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் வரும். பூமி இயந்திரங்களில் விருத்தி ஏற்படும் நல்ல வாகனம் இருப்பிட சௌகரியம் தரும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபம்தரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய தன்ஸ்திரிக்கு உடல்நலம் தரும். ஜீவனோபாயம் உத்தியோகம் இவற்றில் ஜூலை 26 தேதிக்குள் நன்மையை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களையும் மனோதைரியத்தில் செயல்படுத்தச்செய்யும். ஜூலை 17, 18 ஆகஸ்டு 13, 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். முன்கோபப் பேச்சுவார்த்தைகளால் காரியங்களில் தயக்க பலனாக இருந்துவரும். அரசு அனுமதிக் கடித போக்குவரத்தில் ஜூலை 20 தேதிக்குமேல் நல்ல ஏற்பாடுநடக்கும். நல்ல வாகனம் தரும். பசு பால்பிராப்தி திருப்தியளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜூலை 19, 20, 21 ஆகஸ்டு 16 இத் தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பொன்மணி பூஷணம் தரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். அரசு அனுமதி களில் தயக்கம் இருப்பினும் ஆகஸ்டு 6 தேதியில் நன்மை ஏற்பட்டு வரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய உஷ்ண நலிவு போன்றவை நீங்கும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம்நிலவும். ஜூலை 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV

பாடம் - 6.

பண்டார சாத்திரங்கள் :

திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்

பேராசிரியர் முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி

இந்நூல் தருமை ஆதீன குருமுதல்வராகிய குருஞான சம்பந்தரால் அருளிச் செய்யப் பெற்றதாகும். நூலின் பெயர்க் காரணத்தை ஆராயின், இந்நூல் நுவலும் பொருளும் தெரிய வரும். திரிபதார்த்தம் - முப்பொருள்: இறை, உயிர், தளை என்பன. இம்முப்பொருள் உண்மையை அறிந்து, உணர்ந்து, தெளிந்து, விடவேண்டுவதை விடுத்து இணையவேண்டுவதுடன் இணைந்து இன்புற வேண்டுமாற்றைப் படிநிலையில் வைத்து இந் நூல் விளக்குகின்றது. இவ்வகையில் இம்மூன்று பொருள்களையும் அறியுங்கால் அவ்வவற்றின் ரூபம் முதற்கண் இடம் பெறுதலின் ரூபாதி எனக் கூறப்பெற்றது. ரூப ஆதி - ரூபம் முதலாக. அவை ரூபம், தரிசனம், சுத்தி என்பன. தசகாரியம் – பத்து வகைச் செயல்கள். அவை தத்துவ ரூபம், தத்துவ தெரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தெரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தெரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்பன. இவ்வாற்றான், இந்நூற்கண் கூறப்பெறும் பொருள், கூறப்பெறும் முறை, கூறப் பெறும் பொருளின் தொகை ஆகிய மூன்றும் விளங்குகின்றன. இவ்வாறாய பாடுபொருண்மை, அகவல் (ஆசிரியப்பா) வடிவில் அமைந்துள்ளது. ஆதலின் இந்நூல் 'திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்' எனப் பெயர் பெற்றது.

இப்பொருண்மையை நுவலவந்த நூல்கள்பல. அவற்றுள், சீர்காழி, தத்துவநாதரால் செய்யப்பெற்ற 'உண்மை நெறி விளக்கம்' குறிப்பிடத்தக்கதாகும். இதன்வழி எழுந்த நூல்களுள் இதுவும் ஒன்றாம்.

உயிர், முடிந்த பயனாக அடையத்தக்க பொருள் இறைவனே யாம். 'ஊன் அடைந்த உடம்பின் பிறவியே தான் அடைந்த உறுதியைச் சாருமால்' என்பர் சேக்கிழாரும். இவ்வாறு அப்பரம் பொருளை அடைதற்கு உயிர் திருவருள் துணை நிற்பத் தொழிற் படுங்கால், அதற்கு வரும் தடைகள் பல. அவை இருவகைப்படும்.

ஒன்று, தன்னைச்சூழஉள்ள பொருள்களால் ஆயதடை. மற்றொன்று, தனக்குத்தானே அமைந்திருக்கும் சில தடை. இவ்விரண்டினையும் தெளிந்து அவற்றினின்றும் விடுபட்டாலன்றி உயிர்முடிந்த பயனை இறைவனை அடைதல் ஒல்லாது. இதனையே திருவள்ளுவனாரும், "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகல்" என்பர். உயிர் தான் சேர வேண்டிய பொருள் இறை. உயிர் தன்னைச் சார்ந்துள்ள பொருள் தளை. அது யான் எனது என்னும் முனைப்பால் வந்ததாம். இவற்றுள் யான் என்பது உயிர் தன் முனைப்பால் கொள்ளும் நினைவும் செயல்களுமாம். எனது என்பது உலகியல் சூழல்பற்றிக்கொள்ளும் நினைவும் செயல்களுமாம். இவையே அகப்பற்று, புறப்பற்று எனப்படும். உயிர் தன்னைச் சார்ந்துள்ள இவ்விரு குற்றங்களையும் நீக்கவும் தான் சேரவேண்டுவதாய இறைவனை அடையவும் திருவருள் வழி நின்று செயத்தகும் செயல்கள் பத்தாம். அவையே ஈண்டுத் 'தசகாரியம்' என்க் கூறுப்பெறுகின்றது. இப்பத்துச் செயல்களும் உயிர் படிப்படியாக உணர்ந்தும் தெளிந்தும் செய்து உயர்தற்குரியனவாம். அவை தத்துவரூபம், தத்துவதெரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி என அறுவகைப்படும். இவற்றின் வழி இச்சார்புகளெல்லாம் நீங்கப் பெற்ற உயிர் இறைவனை அடையுங்கால் பெறும் அனுபவ நிலைகள் நான்கு வகைப்படும். அவை சிவரூபம், சிவக்காட்சி, சிவயோகம், சிவபோகம் என்பனவாம்.

இவ்வாறு செயத்தகும் செயல்கள் பத்தெனவே பலரும் கூற, இவ்வாசிரியர் தளைநீக்கத்திற்கெனச் செயத்தகும் செயல்கள் பத்தாகவும், உயிர் தன்னை உணரவும், சிவத்தை அடையவும் செயத்தகும் செயல்கள் பதினொன்றாகவும் வைத்து விளக்குகிறார். இவ்வருமை இந்நூற்கமைந்த தனிச் சிறப்பாகும். பத்துவகைச் செயல்களே 'தசகாரியம்' எனப்படும். ஆயினும் இறை, உயிர் ஆகிய இரண்டிலும் பதினொருபடிகள் இருப்பினும் அவையும் பத்துவகைச் செயல்கள் என்றே பெயர் பெறும். அது பதிகம் என்பது பத்துப்பாடல்கள் உடையது எனினும் பதினொருபாடல்கள் உடையனவும் பதிகம் எனப்படுதல்போலாம்.

பாச தசகாரியம்

இப்பாசங்களை உணரவும் இயற்றினின்றும் விடுபடவும் கொளத்தகும் படிகள் பத்தாம். அவை: பாசசுபாவம், பாச வியாத்தி, பாசவியாபகம், பாசத்தின் குணம், பாசவிசேடம், பாச ரூபகம், பாசரூபம், பாசசொரூபம், பாசதெரிசனம், பாசசுத்தி என்பன.

பாச சுபாவம் : பாசம் என்பது நிறைவான அறிவற்ற தாம்.

பாச வியாத்தி : அ. ஆணவம், ஆ. மாயை, இ. கன்மம், ஈ. மாமாயை, உ. திரோதம் என ஐவகைப்படும்.

பாசவியாபகம்

அ. ஆணவம் : இது அனைத்துயிர்களிடத்தும் கலந்திருந்தும், அவை தன்னைக்காணாதவாறு இருப்பது. ஒருபொருளாய் இருப்பது.

ஆ. மாயை : காட்சிப் பொருளாய் அன்றிக் கருத்துப் பொருளாய் நிற்பது. இறைவன் ஆணைவழி உலகு, உடல் கருவியாகவும் நிற்பது. இவ்வாறு வடிவு பெற்றிருக்குங்கால் மாயேயம் எனப்படும்.

இ. கன்மம் : உயிர், அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளுள், பிறந்த உடம்புகளால் முகந்து நின்றன போகப் பின்னும் துய்க்கக் கடவனவாய் எஞ்சிநிற்கும் வினைப்பகுதி 'சஞ்சிதம்', எனப்படும். இதனைப் பழவினை என்பர். இதன்வழி உயிர் துய்த்தற்குரியன நல்வினையும், தீவினையும் ஆம். பிறந்த உடம்பால் முகந்து நின்ற வினை 'பிராரத்தம்' எனப்படும். இதனை 'ஏன்றவினை' அல்லது 'நுகர்வினை' என்பர். இதன் வழியும் உயிர் நலந்தீங்குகளைத் துய்க்கும்.

ஈ. மாமாயை : இது வினைமாசுகலவாது நிற்பது. உயிர்களின் வினை நீக்கத்திற்காக இறைவன் நினைவு மாத்திரையில் கொள்ளும் திருவடிவுகள் இருத்தற்கு இடனாயிருப்பது. இறைவன் அருள்வழி நுவலப் பெற்ற நூல்கள் நிலவுதற்கு இடனாயும் நிற்பது.

உ. திரோதம் : உயிர் தன் வினைமாசு நீங்க இன்ப துன்பங்களைத் துய்த்துத் தொலைத்தல் வேண்டும். அதற்கேற்ப உயிரை மறைப்பித்து நிற்பது.

பாசத்தின் குணம் : அது அறிவற்றதாயிருப்பது.

பாச விசேடம்: அவ்வாறு அறிவற்றதாயினும் உயிர்தத்தம் வினைகளைச் செய்ய ஏதுவாய் இருப்பது.

பாச ரூபகம் : இதன் தன்மை யாண்டும் பரந்து நிற்பது.

பாச ரூபம் : உயிர் உடலெடுக்கவும் அதன்வழி மயங்கி நிற்கவும் நிலைக்களனாக இருப்பது.

பாச சொரூபம் : 'செம்பில் களிம்புபோல' உயிரை அடுத்துநின்று அதனை மறைப்பிக்கும். நஞ்சுண்ட உயிர் மயங்குதல் போலுமயக்குவிக்கும். குற்றம்செய்தவனை ஒறுத்தல்போலவினையை நுகருமாறுஅதற்கு ஊட்டி வருத்தம்செய்யும், தேரைச்செலுத்தும்

பாகன்போல வினைவழித்துய்க்க உயிரைச் செலுத்தி நிற்கும். உலகெங்கணும் பரந்து நின்று உயிரைத் தகைத்து நிற்கும். அவ்வாறு தகைப்பதால் உயிர் பேரருளில் கிடக்குமாறு செய்யும்.

பாச தெரிசனம் : பொய்யைப் பொய்யென்று கருதாவாறு செய்தும் தானேபிரமம் எனக் கூறச்செய்தும் விருப்பு, வெறுப்புகட்கு இடனும் நிற்பது இது என அறிவது.

பாச சுத்தி : பல்லாற்றானும் உயிரும், தளையும் ஒன்றற்கொன்று மறுதலையாய் நிற்கும் என உணர்ந்து அவற்றைத் தன்னின் வேறாகக் கருதுவது. [அம்மறுதலையாவன: உயிர் அறிவுடையது, அருவாயது, நிலையாயது. உடல், உலகு முதலியனவோ அறிவற்றன. உருவுடையன, அழிவுடையன.]

ஆன்ம தசகாரியம்

இதுகாறும் உயிர் தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களை உணருமாறும் அவற்றை விடுக்குமாறும் கூறப்பட்டன. இனி அவ்வுயிர் தன்னை உணருமாறும் தனக்குரிய தலைவனைப் பற்றுமாறும் கூறப்படுதலின் மேலையதனோடு இயைபுடையதாயிற்று இவ்வாறு உணர்தற்கும் பற்றற்கும் உரிய செயல்கள் பதினொன்றும். அவை ஆன்ம சுபாவம், ஆன்ம வியாத்தி, ஆன்ம வியாபகம், ஆன்மாவின் குணம், ஆன்ம விசேடம், ஆன்ம ரூபகம், ஆன்ம ரூபம், ஆன்ம சொரூபம், ஆன்மதெரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என்பன.

ஆன்ம சுபாவம் : உயிர் தத்துவக்கூட்டினைத் தான் எனக் கருதி அதனுடன் கூடியிருப்பது.

ஆன்ம வியாத்தி : தத்துவக் கூட்டில் பற்று உள்ளளவும் அப்பொருளில் அடங்கி இருப்பது.

ஆன்ம வியாபகம் : தன்னோடு பொருந்தி இருக்கும் தத்துவக் கூட்டைத் தானாகக் கருதி அதனிடத்து யாண்டும் பரவியிருப்பது.

ஆன்மாவின்குணம் : உணர்த்த உணர்வதும் உணர்ந்ததை மறப்பதுமாய மடமையுடையது.

ஆன்ம விசேடம் : இருவினை ஒப்பும், மலப் பக்குவமும் ஏற்பட்ட காலத்து இறைவன் குருவாய் வந்து உணர்த்த அவ்வறிவு வடிவாய் நிற்பது.

ஆன்ம ரூபகம் : உடம்பு அழியினும், அதனின் வேறாய் உயிர் உண்டென அறிவது.

ஆன்ம ரூபம் : அறிவு, இச்சை, செயல்களை உடையதாய் அவற்றின் வழித்துன்புற்றிருப்பது. இச்சையாவது, உலகியற் பொருள்களில் பற்றுக்கொண்டிருப்பது. அறிவாவது, அப்பொருள் களைப் பகுத்தறிவது. செயலாவது, அவ்வுலகியற் பொருள்களைத் தனதாக்கிக் கொள்ள முற்படுவது.

ஆன்ம சொரூபம் : உலகு, உடல் முதலியன வானவில்லெனத் தோன்றி அழியும்தகையன என உணர்த்த அவ்வுணர் வின் வழி நிற்பது.

ஆன்ம தெரிசனம் : உயிர், அறிவு வடிவினதாய் நிற்பது.

ஆன்ம சுத்தி : உலகியல் வழிநின்ற அறிவு, இச்சை, செயல்கள் கெட நிற்பது.

ஆன்ம லாபம் : இந்நிலையில் இறைவன் வழங்கும் பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்க நிற்பது.

சிவ தசகாரியம்

உயிர், தான் அல்லாத அத்தனையும் தானென்று உழலாமலும், தான் எல்லாமாய் அதனுள் தாக்காமலும், தான் எல்லாம் ஆனேம் எனும் போதம் தாக்காமலும் உயர்ந்து நின்ற நிலையில் சிவத்தைக் காண்டலும் அதன்வழி அப்பரம்பொருள் வழங்கி அருளும் பேரானந்தத்தைத் துய்க்கவும் நேரும். அவ்வகையில் உயிர் படிப்படியாக உயரத்தகும் படிநிலைகளைக் கூறுவது இப் பகுதியாகும். அவை சிவ சுபாவம், சிவ வியாத்தி, சிவ வியாபகம் சிவத்தின் குணம், சிவ விசேடம், சிவ ரூபகம், சிவ ரூபம், சிவ சொரூபம், சிவ தெரிசனம், சிவ யோகம், சிவ போகம் எனப் பதினொன்றும்.

சிவ சுபாவம் : இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்பது,

சிவ வியாத்தி : யாண்டும் நீக்கமற நிறைந்தும் அனைத் துயிர்களிலும் உயிர்க்குயிராய் விளங்கியும் நிற்பது.

சிவ வியாபகம் : அவ்வாறு நிற்பினும், உயிரது கருமேனி கழிக்கத் திருமேனி கொண்டு நிற்பது.

சிவத்தின்குணம் : என்றும் குன்று அறிவாகி நிற்பது. முற்றும் உணர்தல் என்பதும் அது.

சிவவிசேடம் : உயிர்க்குயிராய் நிற்பதோடு அது கட்டினின்றும் நீங்குமாறு தொழிற்படத்தூண்டுவது.

சிவ ரூபகம் : யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையதாக இருப்பினும் உயிரது வினைமாசு கழிய உயிர்க்குயிராய் அதனோடு ஒன்றி நிற்பது.

சிவ ரூபம் : அறிவு, இச்சை செயல் ஆகிய முத்தொழிற்பட நிற்பது. இம்முத்தொழில்கள் உயிர்க்கும் உளவேனும் உயிரின் நிலைவேறு, இறைவனின் நிலை வேறாம். உயிர்கொள்ளும் இம்முச்செயல்களும் தன்பொருட்டாக நிகழ்வனவாம். இறைவன் கொள்ளும் இச்சையாவது, உயிர்களை ஈடேற்று தற்குத் திருவுளம் பற்றுகையாம். அறிவாவது, உயிர்கள் ஒரு கால எல்லையில் உணர்த்த உணருமாறு செய்வதாம். செயலாவது, உயிர் செய்த வினைக்கேற்ப உடல் கருவி, உலகு, நுகர்வு ஆகியவற்றைக் கொடுத்து அவற்றின் வழி,அவை மலநீக்கம் பெறச் செய்வதாம்.

சிவ சொரூபம் : இறைவன் எல்லாமாய், அல்லவுமாய் நிற்பதாம்.

சிவ தெரிசனம் : உயிர் தன்னை இழந்த நிலையில், இறைவனைக் காண்பதாம்.

சிவ யோகம் : அவ்வாற கண்டபரம் பொருளொடு ஒன்றுபட நிற்பதாம்,

சிவ போகம் : உயிர்தன்னையும், இறைவனையும் அறிந்து அவ்இறைவனுடன் ஒன்றிய நிலையில் அவன் வழங்கும் பேரானந்தத்தைப் பெற்று நிற்பதாம்.

ஒப்பீடு

1. சிவஞானபோதமும் தசகாரியமும் :

இப்பத்துவகைச் செயல்களும் சிவஞானபோதத்தில் கூறப்பெற்றுள்ளன. ஏழாம் சூத்திரத்தில் தத்துவரூபம், தத்துவ

தெரிசனம், ஆன்மரூபம் ஆகிய மூன்றும், எட்டாம் சூத்திரத்தில் தத்துவசுத்தி, ஆன்ம தெரிசனம், சிவரூபம் ஆகிய மூன்றும், ஒன்பதாஞ்சூத்திரத்தில் ஆன்மசுத்தி,சிவதரிசனம் ஆகியவிரண்டும், பத்தாஞ்சூத்திரத்தில் சிவயோகமொன்றும், பதினொன்றாஞ் சூத்திரத்தில் சிவபோகமொன்றும் அடங்கியிருக்கின்றன எனவருங் கூற்றுன் இவ்வுண்மை அறியப்பெறும்.

— தசகாரிய விளக்கம் பக்கம். 88 - 89

2. தசகாரியத்தை விளக்குதலில் ஞான நூல்கள் பதினுன்கனுள் உண்மை நெறிவிளக்கம் முதலிடம் பெறுகின்றது. ஆதலின், அந்நூலொடு இதனை ஒப்பிட்டுக் காணலாம்.

உண்மைநெறிவிளக்கம்	திரிபதார்த்தரூபாதி தசகாரியஅகவல்
தத்துவரூபம்: முப்பத்தாறு தத்துவங்களின் வடிவைக் காண்பது.	இதனைப் பாச சுபாவம் முதலாகப்பாசசொரூபம் ஈருக எண்வகையாக விரித்துக்கூறும்.
தத்துவதெரிசனம் : தத்துவங்கள் நிலையற்றனவாய், அறிவற்றனவாய் அழிவனவாய் இருக்கும் என அறிதலாகும்.	இவ்விரண்டையும், இவ்வகையிலேயே வைத்து விளக்கும்.
தத்துவ சுத்தி : இக்கட்டினின்றும் தன்னை விலக்கிக் காண்டலாகும்.	
ஆன்மரூபம்: தத்துவக்கட்டினின்றும் நீங்கித் தன்னிலையை அறிதல் வேண்டும் எனத் திருவருள் வழங்கிய ஞானத்தைத்தானுகக் காண்பதாம்.	இதனை ஆன்ம சுபாவம் முதலாகஆன்மசொரூபம் ஈருக எண்வகையாக வைத்து விளக்கும்.
ஆன்மதெரிசனம்: உயிர் தன் செயல் என ஒன்று இன்றி,அனைத்தும் இறைசெயலே என உணர்வது. ஆன்ம சுத்தி : உயிர் தன் தன்மை கெட்டு இறையருளில் ஒன்றித் தான் என்பதை உணராது நிற்பதாம்.	இவ்விரண்டனுெடு உயிர் பெறும் பயனுய ஆன்மலாபம் என்பதையும் கூட்டிஉரைக்கும் இந்நூல்
சிவரூபம் : உயிர்களை மலப்பிணிப்பினின்றும் நீக்கி உயர் சிவத்தொடு சேர்க்கும் திருவருளாகிய ஞானமே சிவவடிவாகும்.	இதனைச் சிவசுபாவம் முதலாகச் சிவசொரூபம் ஈருக எண்வகையில் வைத்துஇந்நூல் விளக்கும்

சிவதெரிசனம் : யான் எனது என்ற அற்றஇடமே திருவடியாம். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிற்பது முக மாம். இவ்வடிவை உணர்ந்த நிலையில் தோன்றும் ஆனந்தமே முடியாம். இத் தகைய உயர்நிலைஉற்ற உயிர் மீண்டும் பாசத்துள் அழுந்தாமலும், தன்முனைப் பைப் பெருமலும், தன்னை இவ்வாறு வளர்ந்தெடுத்த அருட்சத்தியில் நின்று அழுந்தி விடாமலும், இன்பவடிவின ஞய் இருக்கும் இறைவனைச் சேர்ந்து நிற்பது சிவதெரிசனமாகும்.

இம்மூன்றையும் இவ் வகையிலேயே வைத்து விளக்கும் இந்நூல்.

சிவயோகம் : எப்பொருளைக் காண்கி னும், அவற்றின் மெய்ப் பொருள் சிவமே எனக்கண்டு, அதனெடு ஒன்றுபடுதலாகும்.

சிவபோகம் : உயிர்தன் செயலற்றுத் தான் அற்று நிற்க இறையருள் அதனைத் தானுக்கி விடும். அதுவே சிவபோகமாகும்.

சிவபோகசாரமும் தசகாரியமும் :

திரிபதார்த்தரூபாதி தசகாரியம் எனும் நூலை அருளிய குருமூர்த்திகளே சிவபோக சாரத்தையும் அருளியவராவர். உயிர் ஈடேறுதற்கான இச்செயல்கள் பத்தையும் திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவலில் விரிவாகக் கூறியவர், சிவபோக சாரத்தில் மிகச் சுருக்கமாகவும் தொகுத்தும் கூறியுள்ளார். அவ்வாறுய இடங்களுள் குறிப்பிடத் தக்கன இரண்டாம்.

1. தானல்லா தத்தனையுந் தானென் றுழலாமல்
தானெல்லா மாயதனுள் தாக்காமல் — தானெல்லாம்
ஆனேம் எனும்போதந் தாக்காமல் ஈசனிடத்து
ஆனேனே ஆயினவ ஞம். (59)

தான் எல்லாமாய் அதனுள் தாக்காமல் என்பது தத்துவ சுத்தி யாகும். தான் அல்லாத அத்தனையும் தான் என்று உழலாது இருப்பது ஆன்ம தெரிசனமாகும். தான் எல்லாம் ஆனேம் எனும் போதம் தாக்காமல் இருப்பது ஆன்ம சுத்தியாகும். ஈசனிடத்து ஆனவனக இருப்பது சிவயோகமாகும். ஆயினவனும் என்பது சிவபோகமாகும்.

2. தத்துவத்தை விட்டருளிற் றன்கலந்து தன்னிழப்பின்
மெத்துஞ் சுகத்தின் மிகஅழுந்திச் — சுத்தமாய்
ஒன்ருகி நின்ற உணர்வும் ஒழிந்தக்கால்
அன்றே சிவபோக மாம். (65)

தத்துவத்தைவிட்டு என்பது என்பது தத்துவ சுத்தியாகும். தான் கலத்தல் என்பது ஆன்ம சுத்தியாகும். தன்னை இழந்து மெத்தும் சுகத்தில் மிக அழுந்துவது என்பது சிவயோகமாகும். சுத்தமாய் ஒன்ருகிநின்ற உணர்வும் ஒழிந்திருப்பது என்பது சிவபோகமாகும்.

ஆடி மாதச் சிறப்பு நாட்கள்

16—7—88	சனி, தக்ஷிணயன (மாசப்ரவேச) புண்ணியகாலம். ஆடிப் பண்டிகை. சுடகரவி 13-02 சர்வநதீரஜஸ்வலா 3 நாட்கள். ஆயில்யவிழா. திருக்கடவூர், திருக்குறுக்கை ஸ்ரீகாலசம்கார மூர்த்தி அபிஷேகம். சீகாழி ஸ்ரீ உமாமகேசுவரருக்கு உச்சிக் காலத்தில் புழுகாப்பு. வேளூர் சீதளகும்பம் பூர்த்தி.
17—7—88	ஞாயிறு, சதுர்த்தி விரதம் வியசிரா.
21—7—88	வியாழன், ஆடிச் சுவாதி, ஸ்ரீ பெருமிழலைக்குறும்ப நாயனார் குருபூஜை.
22—7—88	வெள்ளி, சீகாழி, வைத்தீசுவரன்கோயில், திருக்கடவூர் ஸ்ரீ அம்பாளுக்குச் சந்தனக்காப்பு அலங்காரமும், நவசக்தி அர்ச்சனையும். இவ்விதம் ஆடி மாதம் ஒவ்வொரு வெள்ளி யிலும் நடைபெறும். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், கழறிற் றறிவார் குருபூஜைகள்.
25—7—88	திங்கள், ஸ்ரீ கலிய நாயனார், ஸ்ரீ கோட்புலி நாயனார் குருபூஜைகள்.
26—7—88	செவ்வாய், பிரதோஷம்.
28—7—88	வியாழன், பௌர்ணமி விரத பூஜையில் திரட்டுப்பால் அபிஷேகம். ருத்ரஸா-மனு வியாச பூஜை.
29—7—88	வெள்ளி, ஆகாமாவை. சிரவணவிரதம்.
31—7—88	ஞாயிறு, வேளூர் ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவரபூஜை.
2—8—88	செவ்வாய், ஆடி பதினெட்டாம் பெருக்கு, வேளூர், திருவையாறு முதலிய தலங்களில் தீர்த்தம்.
4—8—88	வியாழன், காளாஷ்டமி. தருமைஆதீனம் 20ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகசுவாமிகள் குருபூஜை.
5—8—88	வெள்ளி, வேளூர், ஆடிப்பூர மகோற்சவ ஆரம்பம்.
6—8—88	சனி, கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். ஸ்ரீ மூர்த்தி நாயனார், ஸ்ரீ புகழ்ச்சோழ நாயனார் குருபூஜைகள்.
9—8—88	செவ்வாய், பிரதோஷம். ஸ்ரீ கூற்றுவ நாயனார் குருபூஜை.
12—8—88	வெள்ளி, சர்வ அமாவாசை. திருவையாற்றில் இரவு ஸ்ரீ அப்பர் சுவாமிக்குத் தென்கயிலாய தரிசனம். ஸ்ரீ பஞ்ச மூர்த்திகள் காட்சி கொடுத்தருளல். தருமை 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கயிலை கண்ட திருநாள். ஆதீன மடாலயத்தில் திருக்கயிலாயமலைத் திருவுருவப்பட ஆராதனை விழா, இரவு வெள்ளி ரதத்தில் திருக்கயிலாயமலைத் திருவுருவப் படம் திருவீதியுலா.
14—8—88	ஞாயிறு. மயிலாடுதுறை ஸ்ரீ சியாமளாதேவி புஷ்பாஞ்சலி. ஆடிப்பூர விழா தீர்த்தம், மதுரை ஆவணி மூல உற்சவ ஆரம்பம்.
15—8—88	திங்கள், சுதந்திரதினம்.
16—8—88	செவ்வாய், ஆடிமாதம் கடைச் செவ்வாய், வேளூர் ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை, நாக சதுர்த்தி, ஆடியிறுதி விஷ்ணுபதி. திருவையாறுமாதப் பிறப்பு தீர்த்தம். சிம்ம ரவி 41-14.

உ

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல்

(பட்டியல் 1:)

1.	சிவபூஜா விதி	ரூ. 2—00
2.	சிவாலய அமைப்பும் மகா கும்பாபிஷேக தத்துவமும்	0—90
3.	காரைக்கால் அம்மையார் திருமுறை	1—60
4.	சிவஞானபோதத் தெளிபொருள்	0—50
5.	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	0—50
6.	கந்தர் கலிவெண்பா	0—60
7.	விநாயகர் வரலாறும் தோத்திரங்களும்	0—90
8.	சொக்கநாத வெண்பா (உரையுடன்)	2—00
9.	அறுவகைச் சமயம்	1—50
10.	வாரவழிபாடு	0—60
11.	சிவபூஜாதீபம்	0—80
12.	விநாயகர் அகவல் (உரையுடன்)	1—50
13.	சிவப்பிரகாசக் கட்டளை	0—70
14.	சைவ அநுஷ்டான விதி	1—40
15.	பண்டாரமும்மணிக்கோவை (குறிப்புரையுடன்)	1—80

அஞ்சல் செலவு தனி

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம்-மயிலாடுதுறை (P. O.),
609001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-7-88.